# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 04 வியாழக்கிழமை (17-04-2003)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:142


ஐ.தே.கட்சி முஸ்லிம் எம்.பிக்கள் - முஸ்லிம் காங்கிரஸ் மோதல் நீடிப்பு

# பிரதமரின் தகுந்த பதில் வரும்வரை ஹக்கீம் கொழும்பு திரும்பமாட்டார்!

## கொழும்பில் பேச்சு நடத்தும் யோசனையும் நிராகரிப்பு

மூதூர்,ஏப்ரல்17

**ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் முஸ்லிம் எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்களுக்கும், ஆளும் கட்சியின் பங்காளியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் முற்றியுள்ள முறுகல் நிலை தணிந்த பாடில்லை.**

**ஐ.தே.கட்சி எம்.பிக்களின் நடவடிக்கைகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து தகுந்த பதில் வரும்வரை முஸ்லிம்காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கொழும்பு திரும்பக்கூடாது என்று முஸ்லிம்காங்கிரஸின் அதியுயர் அரசியல்பீடமும் நாடாளுமன்றக் குழுவும் தீர்மானித்திருக்கின்றன.**

இந்தப் பிரச்சினை குறித்து கட்சியின் நாடாளுமன்ற விவகாரக் குழு, கொழும்பில் பிரதமருடன் பேச்சு நடத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்ட யோசனையும் அடியோடு நிராகரிக்கப்பட்டுவிட்டது. மூதூரில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டனர் என்றும் அவர்களின் ஒருவரின் தாயார் இதனால் தற்கொலை செய்துகொண்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சகாவைச் சுட்ட சிப்பாய் கைது!

தென்மராட்சி,ஏப்.17

புத்தாண்டு தினத்தன்று சக சிப்பாய் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தினார் மற்றொரு சிப்பாய்.

எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த சிப்பாய் பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்.

துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்திய சிப்பாயை கொடிகாமம் பொலீஸார் கைதுசெய்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபரை எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்ற நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார். (ஒ-117)

## முஸ்லிம் இளைஞர்கள் கடத்தலுக்கும் புலிகளுக்கும் தொடர்பேதுமில்லை!

### திருகோணமலை அரசியல் செயலகம் அறிவிப்பு

கொழும்பு,ஏப்.17

திருகோணமலை மாவட்டம் மூதூர் கடலில் சில தினங்களுக்கு முன்னர் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

புலிகளின் திருகோணமலை அரசியல் செயலகம் இது தொடர்பாக நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மூதூரில் தமிழர்களும் முஸ்லிம்களும் நீண்ட பல வருடங்களாக ஒற்றுமையாக ஒரு குடும்பத்தவர்கள் போன்று வாழ்ந்து வருகின்றனர். ஆனால், தங்களுடைய சொந்த அரசியல் இலாபங்களுக்காக தமிழர்களுக்கும் முஸ்லிம

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை புனரமைப்புப் பணிக்கு வருடாந்தம் ரூ. 10,000 கோடி!

### வாஷிங்ரன் கூட்டத்தில் உலகநாடுகள் இணக்கம்

வாஷிங்ரன்,ஏப்.17

இலங்கையின் புனரமைப்புப் பணிகளுக்காக வருடாந்தம் 10ஆயிரம் கோடி ரூபா மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படவேண்டுமென வாஷிங்ரனில் நடைபெற்ற இலங்கைக்கு ஆதரவு வழங்கும் நாடுகளின் பூர்வாங்கக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் இணக்கம் கண்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் காணப்பட்ட இணக்கத்தின்படி எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் ஜப்பானில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவி அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும்.

இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை இலங்கைக்கு வழங்க வேண்டுமென உலக நாடுகள் ஒப்புக்கொண்ட முதற்றடவை இதுவென நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த வாஷிங்ரன் கூட்டத்தின் பின்னர் தெரிவித்திருக்கிறார். உலகின் 25 செல்வந்த நாடுகளினதும் 16 சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களினதும் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். (எ)

## அமெரிக்கா வழங்கும் யுத்தக் கப்பலை அமைச்சர் மொறகொட பார்வையிட்டார்!

கொழும்பு,ஏப்.17

அமெரிக்கா இலங்கைக் கடற்படைக்கு வழங்க முன்வந்துள்ள 'கரேஜஸ்' யுத்தக் கப்பலை தற்போது வாஷிங்ரன் மாநாட்டுக்குச் சென்றிருந்த அமைச்சர் மொறகொட நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

ஹெலிகொப்டர் தாங்கி யுத்தக் கப்பலான இது, கரையோர ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடற்படை 2000ஆம் ஆண்டு டிசெம்பரில் இந்தியாவிடமிருந்து இது

(12ஆம் பக்கம் பார்க்க)

துப்பாக்கிகள், கிரனேட்டுகளுடன் வந்து

## வங்கியைக் கொள்ளையிட்ட சிறை அதிகாரி சுட்டுக்கொலை!

### பெலியத்தவில் பரபரப்புச் சம்பவம்

கொழும்பு,ஏப்.17

பட்டப்பகலில் வங்கியொன்றைக் கொள்ளையிட முயன்ற ஆயுததாரிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் துப்பாக்கிச் சமர் நடந்தது. அதில் கொள்ளைக் கோஷ்டித் தலைவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் ஒரு சிறை அதிகாரி என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சம்பவம் பெலியத்த பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது:-

(12ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவுதினத்தை ஒட்டி சனிக்கிழமை அஞ்சலி நிகழ்வுகள்

### பல இடங்களிலும் அடையாள உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

அன்னை பூபதியின் 15 ஆவது ஆண்டு நினைவு தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்குடாநாடெங்கும் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளன. இதனையொட்டி பல இடங்களிலும் அடையாள உண்ணாவிரதமும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் விரிவான முறையில் செய்யப்பட்டிருக்கின்றன.

தீவகக் கோட்டங்களில் வேலணையில் நாளை வெள்ளிக்கிழமை காலை முதல் அடையாள உண்ணாவிரதம அனுஷ்டிக்கப்படவுள்ளது. நயினாதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலும் நல்லூர், தென்மராட்சி, வடமராட்சி ஆகிய இடங்களிலும் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. காலை முதல் மாலை வரை அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக்கில் கைதான பலஸ்தீன கெரில்லாத் தலைவர் புளொட், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடன் இயங்கியவர்



கொழும்பு,ஏப்.17

ஈராக்கைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் அங்கு பலஸ்தீனக் கெரில்லாப் படைத் தலைவரான அபு அப்பாஸ் என்பவரைக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட அபு அப்பாஸ், எண்பதுகளில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் போன்ற தமிழ் இயககங்களுடன் நெருங்கிச் செயற்பட்டவரென்று கூறப்படுகின்றது.

பலஸ்தீன விடுதலைக்கான பிரபல முன்னணியின் (PFLP) முக்கிய தளபதியாகக் கருதப்படும் அபு அப்பாஸ், பலஸ்தீன விடுதலைப் போராட்டம் தொடர்பான பல சர்வதேச தாக்குதல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்தவர்.

1980களின் நடுப்பகுதியில் இடம்பெற்ற பல்வேறு விமான, கப்பல் கடத்தல் சம்பவங்களில் மிக முக்கிய பங்குவகித்த இவர், சர்வதேச ரீதியாகத் தேடப்பட்டு வந்தவர்.

1985இல் இத்தாலியக் கப்பல் ஒன்று கடத்தப்பட்ட சம்பவத்திலும் முக்கிய சந்தேகநபராக இவர் கருதப்படுகிறார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் நெருங்கிய உறவு கொண்டிருந்த இவர், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் ஆகிய இயக்க உறுப்பினர்களுக்கும் பலஸ்தீனத்தில் ஆயுதப் பயிற்சி வழங்கியவர்களில் முக்கியமானவர்.

மறைந்த புளொட் தலைவர் உமா மகேஸ்வரன், ஈரோஸ் ஸ்தாபகர்களில் ஒருவரான இரத்தினசபாபதி ஆகியோருடன் அவர் நெருக்கமான உறவு கொண்டிருந்தார்.

அவரது இயக்கத்தின் 25ஆவது ஆண்டு நிறைவுவிழா தமிழ்நாட்டில் இயங்கிய அந்த இயக்கப் பிரிவினால் கொண்டாடப்பட்டபோது அதில் பங்குபற்றுவதற்காக தமிழகத்துக்கு அவர் வருகைதந்தார். அச்சமயம் புளொட்டின் தமிழ்நாட்டுத் தலைமைச் செயலகத்திற்கு அவர் விஜயம் செய்தார்.

தொடர் தாக்குதல் மூலமே இலக்கினை அடைய முடியும் (Hit and Run) என்பதில் நம்பிக்கை கொண்ட இவர், தாக்குதல்களை மேற்கொள்ளாத இயக்கம் அழிவடையுமே அன்றி உயிர்வாழ முடியாது என்பதை ஆரம்பத்திலேயே தமிழ் விடுதலை இயக்கங்களுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வடக்கு,கிழக்கில் நொத்தாரிசுமார் பணமோசடியில்!

## காணி உறுதிகளைப் பதிவு செய்வதற்கு தொடர்ந்து முத்திரைக் கட்டணம் அறவீடு

சாய்ந்தமருது,ஏப்.17

வடக்கு, கிழக்கு மாகாண சபை நிர்வாகத்துக்குட்பட்ட பகுதிகளில் காணி உறுதிகளை, காணிக்கந்தோரில் பதிவு செய்வதற்கு முத்திரைக் கட்டணம் செலுத்தவேண்டும் என்று பொய் கூறி உறுதி முடிப்பவர்களிடமிருந்து சில நொத்தாரிசுமார் இப்போதும் பணம் கறந்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

உண்மைநிலை என்னவென்றால் கடந்த வருடம் மே முதலாம் திகதி நடைமுறைக்கு வந்த 2002ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டப்படி முத்திரை வரியை அரசாங்கம் ரத்துச் செய்துவிட்டது. அதனால், காணி உறுதிகளை காணிக்கந்தோர்களில் பதிவு செய்வதற்கு முத்திரைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

ஆனால், வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாண சபைகள், அந்த சபைகளை நிர்வகிப்பதற்கு பணம் தேவை என்ற காரணத்தால் வேறு ஒழுங்குகளைச் செய்து காணி உறுதிகளைப் பதிவு செய்வதற்கு முன்னர் போல முத்திரைக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாண சபை பலவருடங்களுக்கு முன்னரே கலைக்கப்பட்டுவிட்டது. அதிகாரிகளால் மாகாண சபை நிர்வாகம் நடத்தப்பட்டு வருகிறது. அதனால், மற்றைய மாகாண சபை பகுதிகளைப் போல் வடக்கு, கிழக்கில் காணி உறுதிப் பதிவுக்கு, முத்திரைக் கட்டணம் செலுத்துவதற்கு புதிய ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை.

இந்த நிலையில், வடக்கு, கிழக்கில் உள்ள காணிப்பதிவாளர்கள் முத்திரைக் கட்டணம் இல்லாமலே காணி உறுதிகளைப் பதிவு செய்ய வேண்டும் என்று பதிவாளர் நாயகம் வடக்கு, கிழக்கு காணிப்பதிவாளர்கள் அனைவருக்கும் சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறார்.

முத்திரை வரி நீக்கப்பட்ட பின்னரும் வடக்கு, கிழக்கிலுள்ள காணிப் பதிவாளர்கள் பல மாதங்களாக மாமூல் பிரகாரம் முத்திரைக் கட்டணம் அறவிட்டே காணி உறுதிகளைப் பதிவு செய்துவந்தனர். முத்திரைக்கட்டணம் இல்லாமல் காணி உறுதிகளைப் பதிவு செய்யமுடியாது என்று மறுக்கப்பட்டதை ஆட்சேபித்து ஒருவர் நீதிமன்றம் சென்றார். முத்திரைக் கட்டணம் அறவிடுவது சட்டவிரோதம் என்று சுட்டிக்காட்டி அவர் வழக்குத் தாக்கல் செய்தார். அது சட்டவிரோதம்தான் என்று நீதிமன்றம் அவருக்கு சாதகமாகவே தீர்ப்பு வழங்கியது.

இந்த விவரங்கள் உதயனில் ஏற்கனவே விரிவாகப் பிரசுரிக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாண சபை பிரதேசங்களில் உள்ள காணிக் கந்தோர்களில் காணிப் பதிவுக்கு சட்டவிரோதமாகப் பணம் அறவிடப்பட்டு வந்ததையும் 'உதயன்' சுட்டிக்காட்டியிருந்தது. நீதிமன்றத் தீர்ப்பையும் பதிவாளர் நாயகத்தின் சுற்றுநிருபத்தையும் அடுத்து காணிக் கந்தோர்கள் முத்திரைக் கட்டணம் அறவிடுவதை நிறுத்திவிட்டன. என்றாலும், சில நொத்தாரிசுமார் விடுவதாக இல்லை. விடயமறியாத அப்பாவிப் பொதுமக்களிடமிருந்து உறுதிப் பதிவுக்கான முத்திரைக் கட்டணம் என்று கூறி, பெருந்தொகைப் பணத்தைப் பெற்று தாம் ஏப்பம் விடுகின்றனர் என்று புகார் கூறப்படுகிறது. யாழ்ப்பாணத்திலிருந்தும் இதுபோன்ற முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. (ஐ)





கடந்தகால யுத்த நடவடிக்கைகளின்போது குருநகர் பகுதியில் அழிவடைந்த மலசலகூடங்களைப் புனரமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஒருதொகுதி சீமெந்து, கழிவறைக்கு பயன்படுத்தப்படும் மாபிள் கோப்பைகள் (பேசின்கள்) என்பனவற்றை நேற்று வழங்கினார்.

அமைச்சர் மகேஸ்வரனிடம் இருந்து குடும்பத்தலைவி ஒருவரும் - குருநகர் பங்குத்தந்தை வண.பிதா ஜெயசேகரம் அடிகளாரிடமிருந்து இளைஞர் ஒருவரும் கழிவறைக் கோப்பைகளைப் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம். *(படம் : தேவராஜன்)*

# ஈராக்கை மீளக் கட்டியெழுப்பும் பணியில் இலங்கை தொழிலாளர்களுக்கும் பங்கு

## தொழில் அமைச்சர் அமெரிக்கத் தூதுவருடன் பேச்சு நடத்துவார்

யுத்தத்தால் அழிக்கப்பட்ட ஈராக்கை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இலங்கையிலிருந்தும் தொழிலாளர்களை அனுப்புவது குறித்து, தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க விரைவில் அமெரிக்கத் தூதுவரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

கூட்டுப்படைகளின் தாக்குதலால் ஈராக்கின் கட்டடங்கள் நிர்மூலமாகியுள்ளன. அவற்றை மீண்டும் கட்டுவதற்கும் வீழ்ச்சியுற்ற ஈராக்கின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அதற்குத் தேவையான மனித சக்தியை வழங்குவது குறித்தே தொழில் அமைச்சர் அமெரிக்கத் தூதுவரை சந்தித்துப் பேசவுள்ளார்.

இது தொடர்பாகத் தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிக்கையில் -

கடந்தகாலங்களில் ஈராக்கில் மிகக் குறைந்தளவு இலங்கையரே தொழில் வாய்ப்புப் பெற்றுச் சென்றிருந்தனர். இருப்பினும், பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு ஈராக்கில் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். இதற்காக அமெரிக்கத் தூதுவரை விரைவில் சந்திப்பேன் என்று தெரிவித்தார். (எ)

# அமைச்சர் ஹக்கீம் திட்டமிட்டு மூதூர் வந்து 'ஸ்ரண்ட்' அடிக்கிறார்

## மஹ்ரூப் எம்.பி.

கொழும்பு,ஏப்.17

மூதூர் பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எமக்கு ஆத்திரமூட்டும் வகையில் உரையாற்றினார். தமிழ், முஸ்லிம் உறவைப் பாதிக்கும் வகையிலும் உரையாற்றினார். முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் பதவி விலக வேண்டுமென பகிரங்கமாகக் கோரிக்கையும் விடுத்தார். இதையடுத்தே நான் காரசாரமாக உரையாற்ற நேரிட்டது என்று திருமலை மாவட்ட ஐ.தே.க. எம்.பி எம்.ஏ.எம். மஹ்ரூப் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த பலர் அமைச்சர்களாக இருக்கின்றனர். அமைச்சர் ரவூப் ஹக்கீம், துறைமுக, கப்பல் துறை அமைச்சராகவும், கிழக்கு புனர்வாழ்வு, முஸ்லிம் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சராகவும் இருக்கிறார். இலங்கை முஸ்லிம்களின் ஏக பிரதிநிதியாக அரசு - புலிகள் பேச்சுக்களிலும் அவர் கலந்துகொள்கிறார்.

எம்.எல்.ஏ.எம். அதாவுல்லா நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும் பஷீர் சேகுதாவூத் வீடமைப்பு பிரதியமைச்சராகவும் நூர்தீன் மசூர் வன்னி புனர்வாழ்வு அமைச்சராகவும் இருக்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் இவ்வளவு அமைச்சுப் பொறுப்புக்களை கொண்டுள்ளது. அத்துடன், திருமலை மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவராக முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த திஸர் தௌபீக் எம்.பி. செயற்படுகிறார். இத்தனை பதவிகளையும் முஸ்லிம் காங்கிரஸ் வைத்துக்கொண்டு முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகவேண்டும் என பகிரங்கமாக பேசுவது நியாயமா?

இதையடுத்தே, நான் ஐ.தே.க. அமைச்சர்கள் பதவி விலகவேண்டியதில்லையென்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீமே பதவி விலகவேண்டும் என்றும் பேசினேன். - இவ்வாறு மஹ்ரூப் எம்.பி. தெரிவித்தார்.

மற்றும் இரண்டு விடயங்களையும் அவர் சுட்டிக்காட்டினார்.

உண்மையில், மூதூர், தோப்பூர், ஆகிய பகுதிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவென மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்தார் அமைச்சர் ரவூப் ஹக்கீம். நேற்று முனதினம் மூதூரில் இடம்பெற்ற சம்பவத்தை காரணம் காட்டி பிரதமர் வரும்வரை மூதூரைவிட்டு வெளியேற மாட்டேன் என அவர் அறிவித்திருப்பது ஓர் அரசியல் 'ஸ்ரண்ட்' ஆகும்.

அத்துடன், தோப்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுமென்று, அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேசியிருப்பதும் அவரது சந்தர்ப்பவாத அரசியல் போக்கையே காட்டுகின்றது - என்றார்.

# கல்வியங்காட்டில் தொடரும் திருட்டு; மக்கள் நித்திரையின்றி விழிப்பு!

யாழ்ப்பாணம்,ஏப்.17

கல்வியங்காட்டுப் பகுதியில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் பொதுமக்கள் இரவுப் பொழுதினை அச்சத்துடன் கழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் 9ஆம் திகதி கல்வியங்காடு வேளாதோப்புப் பகுதியில் எஸ்.யோகராசா என்பவரது வீட்டினுள் அதிகாலை வேளையில் ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் சமையல் அறையில் வைக்கப்பட்டிருந்த 2ஆயிரத்து 500 ரூபா பணத்தையும் புதிய சைக்கிள் ஒன்றையும் திருடிச் செல்ல முயன்றனர். எனினும், வீட்டு உரிமையாளர்கள் திடீரென விழித்து கூக்குரலிடவே திருடர்கள் திருடிய சைக்கிளை விட்டு விட்டு பணத்துடன் தப்பி ஓடிவிட்டனர்.

இதேவேளை -

அதேவாரம் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு கல்வியங்காடு மனோன்மணி அம்மன் ஆலயத்தின மூலஸ்தானத்திலிருந்த ரூபா 3 ஆயிரம் பெறுமதியான தங்க ஆபரணங்கள் ஆலயத்தின் கூரை பிரித்து இறங்கிய திருடர்களால் திருடப்பட்டுள்ளன.

இதற்கிடையில், கல்வியங்காட்டின் பல்வேறு இடங்களிலும் இரவு வேளைகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்ட முயற்சித்தபோதும், பொதுமக்களின் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக திருட்டுக்கள் தடுக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது. (எ-180)

## கரபந்தாட்டம் இறுதிப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.மாவட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று காலை 8.30 மணிமுதல் நல்லூர் சங்கிலியன் மன்றக் கரபந்தாட்ட மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இறுதிப்போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலை அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

**15 வயது ஆண்**

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெ.மி. கலவன் பாடசாலை.

**17 வயது ஆண்**

இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் எதிர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்

**19 வயது ஆண்**

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் எதிர் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி.

மூன்றாம் இடங்களுக்கான போட்டிகளும் இன்று நடைபெறவுள்ளன. (ஐ)

## தென்னிலங்கையில்

# சீரற்ற ரயில்,பஸ் சேவைகளால் பயணிகள் பெரும் சிரமங்கள்

கொழும்பு,ஏப்.17

கடந்த சில தினங்களாக ரயில், பஸ் சேவைகள் சீரின்றி இருப்பதாக பயணிகள் தெரிவிக்கின்றனர். தமிழ் - சிங்களப் புத்தாண்டு காலத்தை முன்னிட்டு விசேட ரயில், பஸ் சேவைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், பயணிகள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

புத்தாண்டுக்கு சொந்த ஊர்களுக்குச் செல்லப் போதிய ரயில்,பஸ் சேவைகளின்றி சிரமப்பட்ட பயணிகள், புத்தாண்டு முடிந்து மீண்டும் திரும்பி வருவதிலும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ரயில் சாரதிகள் கடமைக்கு வராததால் நான்கு மார்க்கங்களில் ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன என்று ரயில்வேத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

# வாழைச்சேனை வரையே மீண்டும் ரயில் சேவை

மட்டக்களப்பு,ஏப்.17

மட்டக்களப்புக்கான ரயில் சேவை இரு வாரங்களில் மீண்டும் ஆரம்பமாகும். அதுவரை இச்சேவை கொழும்பிலிருந்து வாழைச்சேனை வரையே நடைபெறும் என ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு வரையிலான ரயில் பாதையில் மீண்டும் திருத்த வேலைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. குறைந்த கால அவகாசத்துள் இந்த ரயில் பாதை நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டதால் ரயில் பாதை, போக்குவரத்துக்கு உகந்ததாக அமைக்கப்படவில்லை. இதனால், ரயில்கள் மீண்டும் மீண்டும் தடம்புரண்டன. (எ)

## நாகதீப விகாரையின் பிரதம குரு காலமானார்

கொழும்பு,ஏப்.17

யாழ்ப்பாணம் நாகதீப விகாரையின் பிரதமகுருவான ராஜரிய பண்டித பிராமனவத்த தம்மகீர்த்தி தேரர் காலமானார். இறக்கும்போது இவரது வயது 96.

சிறிதுகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த தேரர், கொழும்பு கடற்படை வைத்தியசாலையில் நேற்றுமுன்தினமிரவு காலமானார். (எ)

## சர்வோதய விளையாட்டு விழா

சர்வோதயத்தின் யாழ்.மாவட்ட நிலையத்தினர் புதுவருடத்தை முன்னிட்டு நடத்தும் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் செல்வபுரம் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. யாழ்மாவட்டத்திலுள்ள பல்வேறு சர்வோதய சங்கங்கள் இந்த விளையாட்டு நிகழ்வில் பங்கு கொள்கின்றன. (எ)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.17

வலிகாமம் கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வலிகாமம் கிழக்கு அரசியல்துறை பொறுப்பாளர் யாழவன் அறிவித்துள்ளார். (எ)

# தம் தலைவரை ஈராக்கியர்களே புதிதாக தேர்ந்தெடுக்க வேண்டும்

## அமெரிக்கா ஏற்பாட்டில் நடந்த கூட்டத்தில் தீர்மானம்

அமெரிக்க ஏற்பாட்டில் நடந்த கூட்டத்தில் ஈராக்கியத் தலைவர்கள்.



பக்தாத்,ஏப்.17

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி அகற்றப்பட்டுவிட்டதால் நாட்டுக்கு புதிய தலைவர் எவரும் வெளி நாடுகளால் திணிக்கப்படக் கூடாது; தமது தலைவரை ஈராக்கியர்கள் தாமே தேர்ந்தெடுக்கவேண்டும் என்று அமெரிக்காவின் ஏற்பாட்டில் நடந்த ஈராக்கியத் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈராக்கில் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அங்கு புனரமைப்புப் பணிகளை ஆரம்பிப்பது மற்றும் இடைக்கால அரசு அமைப்பது என்பன பற்றிய பேச்சுக்களை அமெரிக்காவும் பிரிட்டனும் நடத்த ஆரம்பித்தன.

இந்த விடயத்தில் ஈராக் குழுக்கள் தமக்கிடையில் உள்ள கருத்து வேற்றுமைகளைக் களைய வேண்டும் என்றும் அவை வலியுறுத்தின.

இதற்காக அமெரிக்காவின் ஏற்பாட்டில் நஸீரியாவில் ஈராக்கியத் தலைவர்களின் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் பலதரப்பட்ட ஈராக்கியத் தலைவர்களும் கலந்துகொண்டனர். எனினும், நாட்டின் பெரும்பான்மையினரான ஷியா இன முஸ்லிம் தலைவர்கள் இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்தனர்.

கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் தெரிவிக்கப்பட்டதாவது:-

- ஈராக்கில் ஜனநாயக ஆட்சியே இனி நடைபெறவேண்டும்.
- மத அடிப்படையிலான ஆட்சி அமையக்கூடாது.
- ஈராக்கியர்களே தமது நாட்டுத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.
- எதிர்காலத்தில் அமைய உள்ள புதிய அரசு, ஜனநாயகக் கூட்டாட்சி அடிப்படையிலான ஆட்சியாகவே இருக்கவேண்டும். ஆனால், அது நாட்டு மக்களின் இசைவைப் பெற்றதாக அமையவேண்டும்.
- நாட்டின் சட்ட விதியே, எல்லாவற்றிலும் உயர்ந்தது எனக் கருதப்படவேண்டும்.
- அரசியல் வன்முறை முற்றிலுமாகத் தவிர்க்கப்படவேண்டும். உள்ளூர் அளவிலும் தேசிய அளவிலும் மறுசீரமைப்புப் பணியை ஈராக்கியரே உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.
- நாட்டின் பாதுகாப்பு, அடிப்படைச் சேவைகள் என்பவற்றை அளிப்பதில் ஈராக்கியர்கள் கூட்டுப் படைகளுடன் இணைந்து பங்காற்றவேண்டும்.
- தேசிய அரசியல் கட்சிகளை ஈடுபடுத்துவது குறித்து விவாதிக்கப்படவேண்டும்.
- ஆட்சி வீழ்ச்சி அடைந்ததும் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்களையும் ஆவணங்கள் அழிக்கப்பட்டமையையும் இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

அமைய உள்ள புதிய அரசிலும் ஈராக்கியச் சமூகத்திலும் மதத்தின் பங்களிப்பு என்பது பற்றியும் தலைவர்கள் விரிவாக விவாதித்தனர். 10 நாள்களின் பின்னர் மீண்டும் கூடி இந்த விடயங்கள் பற்றி விவாதிப்பது என்றும் அவர்கள் முடிவு செய்துள்ளனர். (ம)

## லெபனான் அமைச்சரவை இராஜினாமாச் செய்தது!

பெய்ரூட்,ஏப்.17

லெபனான் பிரதமர் ரபீக் ஹரிரி தனது அமைச்சரவையை செவ்வாயன்று இராஜினாமாச் செய்துள்ளார்.

அதிபர் மாளிகையில் நடந்த கூட்டத்துக்குப் பின்னர் அமைச்சரவையின ராஜினாமாக் கடிதத்தை அதிபர் எமிலி லஹௌட்டிடம் சமர்ப்பித்தார்.

புதிய அமைச்சரவை பொறுப்பேற்கும் வரை காபந்து அரசை நிர்வகிக்குமாறு ரபீக்கிடம் அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதிய அமைச்சரவையை மீண்டும் அமைக்க ரபீக் ஹரிரிக்கே அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படுகின்றது.

அரசு மாற்றம் குறித்து கடந்த சில மாதங்களாக விவாதிக்கப்பட்டு வந்தது. வளைகுடாப் பகுதியில் நிலவும் அசாதாரண சூழ்நிலையினால் அரசு மாற்றம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## சிரியாவின் தீர்மானம்!

டமாஸ்கஸ்,ஏப்.17

கிழக்காசியப் பிராந்தியத்தை பேரழிவு தரும் ஆயுதங்கள் அற்ற பகுதியாக அறிவிக்கக்கோரும் பிரேரணை ஒன்றை ஐ.நாவில் கொண்டு வருவதற்கு சிரியா முடிவுசெய்துள்ளது.

செவ்வாயன்று நடந்த 22 உறுப்பினர்களைக் கொண்ட அரபுக் குழுக கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

சிரியா கடந்த ஒரு வருடமாக இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகின்றது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ள நிலையில் சிரியா இந்த முடிவை எடுத்துள்ளது.

## ஈராக்கிற்கு ஐ.நா. நிவாரண உதவி


நியூயோர்க்,ஏப்.17

போரினால் பாதிக்கப்பட்ட ஈராக் மக்களுக்காக சுமார் 4ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள நிவாரணப் பொருள்களை ஐ.நா. அந்த நாட்டுக்கு அனுப்புகின்றது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை நிர்ணயித்தபடி மே 12ஆம் திகதிக்குள் இந்த நிவாரணப் பொருள்கள் ஈராக் போய்ச சேரும் வகையில் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

போர் ஆரம்பிப்பதற்கு முன்பாக பல்வேறு நாடுகளில் இருந்து ஈராக் அரசு உணவுப் பொருள்களை வாங்குவதற்கான ஒப்பந்தங்களைச் செய்திருந்தது. அவையும் இப்போது கப்பல்களில் ஈராக் நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. சிரியா, துருக்கி, ஜோர்டான், குவைத் ஆகிய நாடுகளுக்கு அவை அனுப்பப்பட்டு அங்கிருந்து சாலை மூலமாக ஈராக்கிற்குக் கொண்டு செல்லப்படும். (ம)

## பலத்த பாதுகாப்பின் மத்தியில் ஐரோப்பிய ஒன்றியக் கூட்டம்



ஏதென்ஸ்,ஏப்.17

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களின் கூட்டம் ஏதென்ஸில் நேற்றுப் புதன்கிழமையன்று ஆரம்பமானது. ஈராக்கியப் போரின் பின்னர் நடக்கும் முதலாவது கூட்டம் என்பதால் இந்தக் கூட்டம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. அதனால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியிலேயே மாநாடு நடைபெறுகின்றது.

ஈராக் போரில் ஐரோப்பாவின் முக்கிய நாடுகளான பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகியவற்றுக்கிடையில் கருத்து முரண்பாடுகள் தோன்றியிருந்தன. பிரிட்டன், ஸ்பெயின் என்பன போரை ஆதரித்த போதும் ஜேர்மனியும் பிரான்ஸும் அதனைக் கடுமையாக எதிர்த்தன.

இந்தக் கூட்டத்தொடரில் முக்கியமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்காலம் மற்றும் ஒன்றியத்தில் புதிதாக 10 நாடுகளைச் சேர்த்துக் கொள்வது போன்ற விடயங்களே முககியமாக ஆராயப்படும் என்று ஒன்றியத்திற்கு தற்போது தலைமை தாங்கும் கிரேக்கம் தெரிவித்துள்ளது.

ஈராக் போர் பற்றிய விடயம் இந்த இரு நாள் கூட்டத்தொடரில் முக்கிய விடயமாக எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும், போருக்குப் பின்னான ஈராக்கில் ஐரோப்பிய நாடுகளின் பங்கு குறித்த மாநாடு நிச்சயம் ஆராய வேண்டி வரும் என்று ஆய்வாளர்கள தெரிவிக்கின்றனர்.

ஏனெனில், ஈராக் விடயத்தில் ஐரோப்பிய நாடுகள் புதிய கொள்கைகளை வகுத்துக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் றொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

உலக அரங்கில்

## பலஸ்தீன தீவிரவாதத் தலைவர் அமெரிக்கப் படையினரால் கைது!

### தெற்கு பக்தாத்தில் சம்பவம்

பக்தாத்,ஏப்.17

ஈராக்கைக் கைப்பற்றியுள்ள அமெரிக்கப் படைகள் அங்கு சதாமையும் அவரது கூட்டாளிகளையும் கைதுசெய்வதற்காக மேற்கொண்டு வரும் தேடுதல் நடவடிக்கைகளின் போது பலஸ்தீனத் தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

பலஸ்தீன கெரில்லா அமைப்பொன்றின் தலைவரான அபு அப்பாஸ் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

1985இல் இத்தாலியக் கப்பல் ஒன்றை கடத்திச் சென்ற சம்பவத்தில் தொடர்புடைய முக்கிய குற்றவாளி அப்பாஸ் என்று அமெரிக்கா கூறுகின்றது.

அந்தக் கடத்தல் சம்பவத்தில் ஓர் அமெரிக்கப் பயணி கொலை செய்யப்பட்டார். அவரைக் கொன்றது அப்பாஸ் தான் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தக் கடத்தல் சம்பவத்தில் அப்பாஸுடன் சேர்ந்து ஈடுபட்டிருந்த மேலும் நால்வர் கைது செய்யப்பட்டனர். ஆனால், அப்பாஸ் மட்டும் தப்பிவிட்டார்.

இஸ்ரேலியச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 50 பலஸ்தீனக் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று கோரியே அப்பாஸால் இந்த கடத்தல் நாடகம் அரங்கேற்றப்பட்டது.

சதாமையும் அவரது மகன்களையும் ஏனைய கூட்டாளிகளையும் தேடி அமெரிக்கா நடத்திவரும் வேட்டையில் இவர் எதிர்பாராமல் சிக்கிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பக்தாத்தின் தென்பகுதியில் இவர் நடமாடுவதாகக் கிடைத்த உளவுத் தகவல்களை அடுத்து அங்கு சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்திய அமெரிக்கப் படையினர் அப்பாஸைக கைது செய்தனர்.



அபு அப்பாஸ

அப்பாஸ் கைது செய்யப்பட்டதன் மூலம் அதிபர் சதாமுக்கும் தீவிரவாத அமைப்புக்களுக்கும் இடையில் தொடர்புகள் இருந்தன என்ற தனது கூற்று நிருபிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா இப்போது கூறுகின்றது.

ஆனால், அப்பாஸை அமெரிக்கா உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று பலஸ்தீன அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

"அமெரிக்கா அபு அப்பாஸை விடுவிக்க வேண்டும் என்று நாம் அவர்களிடம் வலியுறுத்தியுள்ளோம். அப்பாஸைக் கைது செய்வதற்கு அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை" - என்றார் பலஸ்தீன அமைச்சர் சயீப் எர்காட்.

அதேசமயம் -

தனது கப்பல் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் அப்பாஸ் என்பதால் அவரைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி இத்தாலி அமெரிக்காவிடம் கோரியிருக்கின்றது.

இது குறித்து கட்டாரில் இருக்கும் அமெரிக்கப் படைகளின் தலைமையகத்தில் பேசிய பேச்சாளர் மேஜர் பிராட் பர்டெல்ட் "நீதி நிலை நாட்டப்படும்" - என்றார். அது தவிர வேறு எந்த விவரத்தையும் அவர் வெளியிடவில்லை.

## சதாமின் மனைவி சிரியாவில் தஞ்சம்?

ஈராக்கில் போர் முடிந்து விட்டது என்று கூறினாலும் அங்கு அமெரிக்கப் படைகள் தொடர்ந்தும் தேடுதல்களை நடத்தி வருகின்றன. சதாம் மற்றும் அவரது குடும்பத்தினர், கூட்டாளிகள் என 55பேரையும் அவர்கள் தேடிவருகின்றனர். இந்நிலையில், சதாமின் முதல் மனைவி சாஜிதா கைரால்லா சிரியாவில் தஞ்சம் அடைந்துள்ளதாக இப்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க உளவுத்துறையினை அடிப்படையாகக் கொண்டே இந்தச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சதாமின் உறவினர்கள் சிலர் சிரியாவுக்கு தப்பி விட்டனர் என்று அமெரிக்கா ஏற்கனவே குற்றஞ்சாட்டி வரும் நிலையில், சதாமின் மனைவி சிரியாவில் இருப்பதான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

சதாமின் தம்பியான ஜப்பார் கல ஜப்பாரும் வேறு சில கூட்டாளிகளும அமெரிக்கப் படையினரிடம் சரணடைந்தாலும், சதாமின் முக்கிய கூட்டாளிகளும் பேரழிவு ஆயுதங்களைத் தயாரிப்பதில் முக்கிய பங்காற்றியவர்கள் என்று கூறப்படும் பெண் விஞ்ஞானிகளான ஹுடா அம்மாஷ் மற்றும் ரிகாப் தகா ஆகியோர் அமெரிக்கர்களிடம் இன்னும் சிக்கவில்லை. (ம)

# கேள்வி அறிவித்தல்

## வலயக்கல்வி அலுவலகம் - வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளரினால் 2003ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ.இல. | பாடசாலையும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 1. | யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்.பாட. மாடிக்கட்டடத் தொடர் வேலை 70'x25' | 500/= | 5,000/= |

01 மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 2002ஆம் ஆண்டு புதுப்பித்த புத்தகம் கொண்ட எம் 09 உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவுசெய்துகொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.

02. கேள்விப் பத்திரங்களில் பெறுமதிசேர் வரி (VAT) 10% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்வரி (VAT) 10% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப் படுதல் வேண்டும்.

03. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து, கேள்விப் பத்திரங்களை 17.04.2003ஆம் திகதியிலிருந்து 23.04.2003ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும் எம்மால் வழங்கப்படும். ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப் பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரையிடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் 2003ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05. தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 3மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி றெ.இருதயநாதன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.*

(C/27439)

## குருக்கள் தேவை

எமது ஆலயத்திற்கு நிரந்தரமாகக் கடமையாற்ற குருக்கள் தேவை. விண்ணப்பதாரர்கள் சுய விவரத்துடன் பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு 26.04.2003இற்கு முன் மனுச்செய்வதுடன் 27.04.2003 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு ஆலயத்திற்கு நேரில் சமுகந்தரவும்.

தலைவர்,
ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோவில்
(பன்றிக்கோட்டு பிள்ளையார் கோவில் )
தர்மகர்த்தா சபை.

*இல. 555, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.* (16850)

## மனோதத்துவ வைத்தியம்

### (GENERAL PSYCHOTHERAPY)

யாழ்ப்பாணத்தில் 16.04.2003 - 21.04.2003 வரை.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்!

இளைஞர்களே!

சக்தி குறைவு - ஞாபகமறதி - பயம் - நடுக்கம் - நித்திரைக்குறைவு இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலை வேண்டாம்.

உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்!

ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா?

மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்புகொள்ளவும்:
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

Govt.Regd.No. 9492

HOT LINE - 0777 - 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்).

(சி-27384)

## துயர் பகிர்கின்றோம்

நில அளவையாளரும், ஊரெழு ஸ்ரீ விரகத்தி விநாயகர் ஆலய முன்னாள் தலைவருமாகிய

### K.கனகசபாபதி


அவர்கள் 15-04-2003 அன்று காலமானதால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரது துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரது ஆத்மா விநாயகர் பாதம் சென்றடையப் பிரார்த்திக்கும்...

நிர்வாக சபையினர்,
ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்.

ஊரெழு.

(16834)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



"மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை"
என்பதற்கு எடுத்துக்காட்டாக
சாதி, மத பேதமற்ற முறையில்
உதவி கேட்கும் எல்லா நிறுவனங்களுக்கும்
இல்லையென்றாது இன்முகம் காட்டி
வாரி வழங்குகின்ற
மாண்புமிகு இந்துசமய விவகார அமைச்சர்

## தியாகராசா மகேஸ்வரன்

அவர்கள்

பெருமையும் புகழும் பெற்று மேன்மையுடன்
வாழவேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

### பாராட்டி வாழ்த்துவோர்:

01. பொருளாதார கலாசார வளர்ச்சிச் சங்கம்
புனித அன்னாள் சனசமூக நிலையம், இளவாலை.
02. புனித கயித்தார் சனசமூக நிலையம், மாரீசன்பதி, இளவாலை.
03. புனித பூதாததேயு சனசமூக நிலையம், இளவாலை.
04. கலம்பராகிரி சனசமூக நிலையம், மாரீசன்கூடல், இளவாலை.
05. சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம், இளவாலை.
சித்திரமேழி ஞானவயிரவர் கோயில், இளவாலை.
ஒல்லுடை அறநெறிப் பாடசாலை, இளவாலை.
06. ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம், உயரப்புலம், இளவாலை.
புனித சகாசகாய அன்னை முன்பள்ளி, சகாயபுரம், மாதகல் தெற்கு.
07. சகாயபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதகல் தெற்கு.
ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயம், இளவாலை.

(16843)

# உதயன்

## ஜே.வி.பியின் கதையும் புலிகளின் காதையும்

"ஆயுதம் ஏந்திப் போராடிய ஜே.வி.பி. இப்போது அந்த வழியைக் கைவிட்டுவிட்டது. ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளது. அதேபோன்று ஆயுதம் ஏந்திப் போராடும் விடுதலைப் புலிகளும் ஜனநாயக வழிக்குத் திரும்புவர் என நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஜே.வி.பியினர் இந்த நாட்டின் பொருளாதாரத்தை அடியோடு அழித்தவர்கள்; ஜனநாயகத்தின் மீது நம்பிக்கைவைக்காது செயற்பட்டவர்கள். அரசியல்வாதிகளையும், ஆசிரியர்களையும், மதத் தலைவர்களையும், பல்கலைக்கழக மாணவர்களையும் கொன்று குவித்தவர்கள். அத்தோடு நின்றுவிடவில்லை. கதிர்காமத்தையும் தலதாமாளிகையையும் தாக்கினார்கள். பொலீஸாரையும் இராணுவத்தினரையும் கொன்றார்கள். தேசியச் செல்வங்களைச் சூறையாடினார்கள் என்ற பழைய கதையையெல்லாம் விவரித்திருக்கின்றார் பிரதமர்.

மாகாண சபைகள் அமைக்கப்பட்டால் நாட்டைப் பல 'துண்டுகளாகப் பிரித்து விடுவார்கள் என்று ஆர்ப்பாட்டம் செய்த ஜே.வி.பியினர், இன்று மாகாண சபைகளுக்குக் கூடுதலான அதிகாரம் வேண்டும் என்று கோஷமிடுகின்றார்கள். அன்று ஆயுதம் தாங்கியிருந்த அவர்கள் இன்று பிரதேச சபைகள், மாகாண சபைகள் எனப் பலவற்றிலும் அங்கம் வகிக்கின்றனர். நாடாளுமன்றத்திலும் ஒரு குழுவாக இயங்குகின்றனர் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டுகின்றார்.

ஹட்டனில் புதிதாகக் கட்டப்பட்ட மாடி வீட்டுக்கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்து தொழிலாளரிடம் கையளித்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதை தென்பகுதி மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக மேற்படி வாதத்தைப் பிரதமர் முன்வைத்திருப்பாரேயானால் அது நியாயப்படுத்தக் கூடியதே.

ஆனால், ஜே.வி.பி. போன்று புலிகளின் ஆயுதப் போராட்டத்தையும் உரிய தீர்வைக் காணாமல் அடக்கிவிடலாம் என்ற நம்பிக்கையில் இந்தவாதத்தை அவர் முன்வைத்திருப்பாரேயானால் அது யதார்த்தத்தில் நிறைவேறிவிடக் கூடிய விடயமல்ல என்பதை அவர் உணர்ந்து கொள்வது நல்லது.

எழுபதுகளின் ஆரம்பத்திலும் எண்பதுகளின் கடைசியிலும் ஜே.வி.பி. நடத்திய ஆயுதக் கிளர்ச்சி வேறு; கடந்த இரண்டு தசாப்தகாலமாகப் புலிகளின் தலைமையில் தமிழர்கள் நடத்திவரும் உரிமைப் போர் வேறு.

இரு தரப்பினரதும் நோக்கங்கள், இலக்குகள் வெவ்வேறானவை; இரு அமைப்புகளினதும் தலைமைத்துவப் பண்பு, சிறப்புகள் வெவ்வேறானவை; அமைப்புகளின் கட்டுக்கோப்புகள், வழிநடத்தல் சிறப்பு போன்றவை கூட வெவ்வேறானவை.

புலிகளின் தலைமையின் கட்டுக்கோப்பு, போராளிகளின் ஈகம், தியாகம், துணிச்சல் சளையாத போராட்டவலு - உணர்வு என்பன ஒப்பிடமுடியாதவை.

ஆட்சி அதிகாரத்தைத் தனதாக்கிக் கொண்டு தற்போது நடைமுறையில் இருக்கும் பொருளாதார, அரசியல் முறைமைகளை மாற்றியமைக்கும் எண்ணத்தோடு ஜே.வி.பி. முன்வைத்த போராட்டமும் அடிமைப்பட்ட தனது இனத்தின் விடுதலைக்காக - சம உரிமைக்காக - சுதந்திர உணர்வோடு வே.பிரபாகரன் முன்வைத்த தியாக வேள்வியும் ஒன்றோடு ஒன்று ஒப்பிடமுடியாத இரு வேறு அம்சங்கள்.

ஆயதப் போராட்டத்தைத் தொடர முடியாது - அடிவாங்கிக் களைத்து -- அடங்கிப் போய் வேறுவழியின்றி ஆயுதங்களைக் கைவிட்டு, ஜனநாயக வழிக்கு வந்துள்ள ஜே.வி.பியின் கதை வேறு.

வீறு கொண்டு, ஆயுதப் போராட்டத்தில் தலைவணங்க மறுத்து வெற்றி நடைபோடும் நிலையிலும், அமைதி முறையில் சமாதான வழியில் - ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு இணக்கத் தீர்வு காண்பதற்காக ஆயுதங்களை ஓயவைத்து, யுத்தத்தை நிறுத்தி, சமரசப் பேச்சுக்கு முன் வந்துள்ள புலிகளின் போராட்டக் காதைவேறு.

ஜே.வி.பி. போன்று ஆயுத முனையில் அடக்கக் கூடிய கிளர்ச்சியல்ல தமிழர்களின் விடுதலைப் போராட்ட எழுச்சி.

தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் தீர்வை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, ஜனநாயக வாழ்விற்குத் திரும்புமாறு அவர்களைக் கோருவதே இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க ஒரே வழியாகும்.

இதை ஜே.வி.பி. உட்பட பெரும்பான்மைச் சிங்கள அரசியல் சக்திகள் புரிந்துகொள்வது நல்லது.

# பதில் கடமைக்கான கொடுப்பனவு கிராம அலுவலர்களுக்கு கிடையாது!

### அமைச்சு அறிவிப்பு

வலி.வடக்கு,ஏப்.17

தமது பிரிவுடன் வேறு பிரிவுகளிலும் பதில் கடமையாற்றி வரும் கிராம சேவையாளருக்கான கொடுப்பனவுகள் உடனடியாக நிறுத்தப்படுவதாக திறைசேரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான அறிவுறுத்தல் மாவட்டச் செயலகங்களுக்கு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பதில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கான கொடுப்பனவுகளை உடனடியாக நிறுத்தும் படியும் -

கிராம அலுவலர்கள் இல்லாத பிரிவுகளை கிராம அலுவலர்கள் உள்ள ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளுடன் இணைத்துவிடும்படியும் - கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை - சில பிரதேச மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் கிராம அலுவலர்கள் இருக்கின்றபோதிலும் சில பிரதேச மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகளில் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான கிராம அலுவலர்களே கடமையாற்றி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(ஓ-86)

## நாட்டு நடப்பு

### இலண்டன் மாப்பிள்ளை

அத்தரோடு 'சென்ட்' பூசும்
ஆளும் நல்ல சிவலைதான்
மொத்தமான சங்கிலியும்
முழுதாய் கழுத்தில் தொங்குது
மெத்த நெளிந்த தலை முடி
மேலும் ஒரு தொப்பிதான்
அத்தான் என்று மெச்சி
அவரைச் சுற்றி புறோக்கர்மார்
மெத்தக் கள்ளை விரும்பியே
மூன்று போத்தல் குடித்தபின்
அத்தான் வெறி ஏறிடவே
அகற்றி விட்டார் 'டோப'பினை
நத்தை ஓடு போல மண்டை
நன்கு கறுத்துக் கிடக்கவே
செத்தேன் பிழைத்தேன் என்று
செருப்பை விட்டு புறோக்கர் ஓடினார்.

- விகடகவி.

# புற்றுநோய் வைத்தியசாலைக் கிராமம் நவீன வசதிகளுடன் இங்கு அமையும்

## இடத்தைத் தெரிவுசெய்ய குழு அமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.குடாநாட்டில் நவீன வசதிகள் கொண்ட புற்றுநோய் வைத்தியசாலைக் கிராமம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. அதனை அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வதற்கென துறைசார்ந்த நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தில் இடம்பெற்றது. அந்தக் கலந்துரையாடலிலேயே மேற்படி குழு அமைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் சுகாதார அமைச்சு அதிகாரி வைத்திய நிபுணர் திருமதி சூசி பெரேரா மற்றும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடப் பேராசிரியர் வி.குணானந்தம் ஆகியோர் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இதில், புற்றுநோய் வைத்தியசாலைக் கிராமத்தை அமைப்பதற்கான இடம் குறித்து ஆராயப்பட்டது. வல்வெட்டித்துறை, தெல்லிப்பழை, இணுவில் மற்றும் யாழ்.பண்ணைப் பகுதி போன்ற இடங்களில் ஒன்றில் இதனை அமைக்கலாம் எனக் கருத்துக் கூறப்பட்டது. ஆனால், அது குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இடத்தைத் தெரிவுசெய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவே அதனை முடிவுசெய்யும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அருகில் உள்ள ஓர் இடத்தில் இந்தப் புற்றுநோய் வைத்தியசாலைக் கிராமத்தை அமைப்பதே சிறந்தது என்று கலந்துரையாடலில் பங்குபற்றிய சுகாதார அமைச்சு அதிகாரியான வைத்திய நிபுணர் திருமதி சூசி பெரேரா கருத்துத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புற்றுநோய்க்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 'கோபேட்' இயந்திரம் மூலமான சிகிச்சை பழைமையானது. பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தக் கூடியது.

இதனால், நவீன 'லைனர் அக்ஸ்லேற்றர்' (Linear acceleetor) மூலமான சிகிச்சையை மேற்கொள்வதே நன்று.

குடாநாட்டில் 'கோபேட்' சிகிச்சையை செயற்படுத்த ஆரம்பித்தால் மேலதிக சிகிச்சைக்காக நோயாளிகள் கொழும்பு செல்லவேண்டிய நிலைதொடரும்.

எனவே, இங்கு ஆரம்பித்திலேயே 'லைனர் அக்ஸ்லேற்றர்' சிகிச்சை முறையைப் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதே சிறந்தது - என்றார்.

இந்த விடயங்கள் குறித்து எதிர்வரும் 24 ஆம் திகதி மீண்டும் ஒரு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இதில் கொழும்பில் இருந்துவரும் வைத்திய நிபுணர்கள் பலரும் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் வைத்தியசாலை கிராமத்தை அமைப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்ட இடங்களையும் அதற்கான குழுவினர் நேரில் பார்வையிட்டு பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலைக் கிராமம் தொடர்பாக தமது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புவோர் நேரிலோ தபால் மூலமோ கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-10)

# சட்டக்கல்லூரிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

இலங்கைச் சட்டக்கல்லூரியில் 2004ஆம் கல்வி ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சையில் புதிய பாடத்திட்டமாயின் ஒரே அமர்வில் மூன்று பாடங்களிலும், பழைய பாடத்திட்டமாயின் ஒரே அமர்வில் நான்கு பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சித்தியடைந்த பாடங்கள் சட்டக்கல்விப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

மேலும், ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் தமிழில் திறமைச்சித்தி பெற்றிருத்தலும் வேண்டும். விண்ணப்பதாரிகளுக்கான நுழைவுப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அதிபர், இலங்கைச் சட்டக்கல்லூரி, இல. 244, புதுக்கடைத் தெரு, கொழும்பு - 12 என்ற முகவரிக்கு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பப் பத்திரம் மற்றும் விவரங்கள் அடங்கிய புத்தகத்தை ரூபா 450 செலுத்தி அலுவலக வேலை நாள்களில் கொழும்பு சட்டக்கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும். அவற்றை தபால்மூலம் பெறவிரும்புபவர்கள் ரூபா 450 இற்கான வங்கிப்பற்றுச் சீட்டையும், சுயவிலாசமிடப்பட்ட 15"x10" அளவிலான தபால் உறையுடன் தபாற் செலவுக்கான 85 ரூபா பெறுமதியான முத்திரையையும் இணைத்து அனுப்புதல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-9-185)

### நாளை

சித்திரை 5
வெள்ளிக்கிழமை
(18.04.2003)
திதி : துதியை
முன்னிரவு 9.13 வரை.
நட்சத்திரம்: சுவாதி
காலை: 7.10 விசாகம்
வைகறை 5.33 வரை.
*பெரிய வெள்ளி*
சுபநேரம் : 6.03 - 7.33
ராகுகாலம் : 10.33 - 12.03
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

இறைவன் பெருமை கொள்வோரின் பகைவனாகிறான்.

### உடல் வலியைப் போக்குவதற்காக

# அளவுக்கதிகமாக மாத்திரைகளை உட்கொண்டவர் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,ஏப்.17

வலி நிவாரணி மாத்திரையை அளவுக்கதிகமாக உட்கொண்ட நபர் சுயநினைவற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரே அளவுக்கதிகமாக மாத்திரையை உட்கொண்டதால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் உடல் வலியைப் போக்க வலி நிவாரண மாத்திரை ஒன்று உட்கொள்வது வழக்கமென்றும் -

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஒரு மாத்திரைக்குப் பதிலாக 3 மாத்திரைகளை அவர் உட்கொண்டுவிட்டு உறங்கியதாகவும் -

மறுநாள் காலையில் அவர் எழுந்திருக்காததால், வீட்டிலுள்ளோர் எழுப்பியபோது அவர் சுயநினைவற்ற நிலையில் இருந்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

சுயநினைவற்ற நிலையில் அவர் அன்றையதினம் யாழ் போதனா வைத்தியசாலையில்அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்ற போதும் சுயநினைவு திரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

மாத்திரைகளை தக்க மருத்துவ ஆலோசனையின்றியோ அல்லது கவனயீனமாகவோ உட்கொள்வதை தவிர்த்தால் விபரீத விளைவுகள் நேரிடாது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஓ-12)

# மணல் அகழ்வு குறித்த கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.குடாநாட்டில் மணல் அகழ்வது தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முகமாகவும் மணல் அகழ்வதற்குப் பதிலாக மாற்றுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் ஆராய்வதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று அரச அதிபர் தலைமையில் இன்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சில முக்கிய பொதுத் தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் அரச அதிகாரிகள், சூழல் பாதுகாப்புத் துறையினர் மற்றும் துறைசார் அறிஞர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# 'ஈஸ்ற்' விநியோகத்தைக் கட்டுப்படுத்தி கசிப்பு உற்பத்தியை ஒழிக்க முடியும்!

## நல்லொழுக்க சம்மேளனம் யோசனை

யாழ்ப்பாணம்,ஏப்.17

குடாநாட்டில் 'ஈஸ்ற்' விநியோகத்தைக் கட்டுப்படுத்தினால் கசிப்பு உற்பத்தியை ஓரளவுக்கேனும் ஒழிக்க முடியும்.

- இவ்வாறு யோசனை தெரிவித்துள்ளது வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்.

இது தொடர்பாக வடபிரதேச நலவொழுக்க சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் மதுபோதையைப் பொறுத்தமட்டில் 'கசிப்பு' என்ற அரக்கன் எத்தனையோ உயிர்களைக் காவு கொண்டுள்ளான். மேலும் கசிப்பு உற்பத்தியை ஒரு குடிசைக் கைத்தொழிலாக நினைத்து மக்கள் செயற்பட்டு வருகின்றார்கள். இந்த உற்பத்திக்கு இலட்சக்கணக்கில நீதிமன்றங்கள் அபராதம் அறவிட்டாலும் சம்பந்தப்பட்டவர்கள் இத்தொழிலைக் கைவிடுவதாகத் தெரியவில்லை.

எனவே, கசிப்பு உற்பத்தியை முற்றாக நிறுத்த வழிவகைகளை நாம் கண்டறியவேண்டும். இந்த வழியில் முதலாவதாக கசிப்பிற்கு முக்கிய உற்பத்திப் பொருளான 'ஈஸ்ற்' சுலபமாக மக்களுக்கு கிடைப்பதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இந்த வகையில் ஏ-9 பாதை வழியாக 'ஈஸ்ற்'றைக் கொண்டு வருவதற்கு தனிப்பட்ட வியாபாரிகளுக்குத் தடைவிதிக்க வேண்டும். ஈஸ்ரைக் கொண்டுவரும் உரிமையை பேக்கரி உரிமையாளர் சங்கத்திற்கு அல்லது கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டும் வழங்கவேண்டும். எக்காரணம் கொண்டும் தனியார் கடைகளில் இதனை விற்பனை செய்வதனைத் தடைசெய்தல் வேண்டும்.

இந்த நடைமுறையைக் கையாண்டு கசிப்பு உற்பத்தியை 50 வீதமாவது கட்டுப்படுத்த முடியுமென நம்புகின்றோம்.

அடுத்ததாக கசிப்பு உற்பத்தியாளர்கள் நீதிமன்றத்தில் தண்டிக்கப்படும்போது அக்குடும்பத்திற்கு வழங்கப்படும் இலவச நிவாரண உதவிகள், அரசின் ஏனைய நிவாரண உதவிகளை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் எமது தமிழ் சமுதாயம் காலப்போக்கில் அழிந்தேவிடும்.

இதற்காக வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் பெருமுயற்சி எடுத்துவருகின்றது. இதற்காக கொழும்பிலுள்ள 'அடிக்' நிறுவனத்தின் உதவியுடன் தம்மால் இயன்றளவு போதைப் பொருள் பாவனையில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக பாடசாலைகள் தொடக்கம் பொது நிலையங்கள் வரை சென்று பிரசார செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த நடவடிக்கையினால் அவர்களுக்கு பூரண நிறைவு ஏற்படாவிட்டாலும் ஓரளவேனும் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற ஒரே நோக்கிற்காக எதிர்ப்புக்கள் வந்தாலும் பொறுமையைக் கடைப்பிடித்து செயற்பட்டு வருகின்றோம் என்றுள்ளது. (ஒ-ரி)

### வடமராட்சியில் வங்கிக் கிளைகள் திறக்கப்படும்

வடமராட்சிப் பகுதியில் ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி ஆகிய தனியார் வங்கிகளின் கிளைகள் விரைவில் திறக்கப்படவுள்ளன. இந்த இரு கிளைகளும் நெல்லியடி பட்டினத்தில் அமையவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. யாழ். நகரத்துக்கு வெளியே தனியார் வங்கிக கிளைகள் திறக்கப்படுவது இதுவே முதற்தடவையாகும். (ஐ-173)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 - 01 - 1919



மறைவு 08 - 05 - 2001

### அமரர் ஆசைப்பிள்ளை வைரமுத்து

திதி-17-04-2003 (அபரபக்க பிரதமை)

ஆசையுடன் எமை வளர்ந்தீர் – இன்று எம்மை
ஆதரிக்க யாருமில்லை...!
கூடு கட்டி வாழ்ந்திருந்தோம் – இன்று
கூட்டில் நீங்கள் இல்லை
பாசத்துடன் வாழுகின்றோம் – உங்கள்
நினைவுகளுடன் நாம்.

(16829)

வேவில், கொடிகாமம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.




சந்தைப்படுத்துவோர்:
**HARCOURTS(PRIVATE)LTD.**
No:14, Station Road, Dehiwala.

யாழ்.முகவர்:
**JEGHAN PHARMACY**
ஜெகன் பார்மஸி
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021- 2222194

## 60 வருட வைத்தியசேவைநலன் பாராட்டல்

பரம்பரை சித்தவைத்தியரும், சித்த வைத்திய பட்டதாரியும், வைத்திய கலாநிதியுமாகிய அ.கிருஷ்ணசாமி அவர்களின் 60 வருடகால சேவையைப் பாராட்டுமுகமாக சித்த ஆயுர்வேத முன்னாள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பூ.உரோமகேஸ்வரன் தலைமையில் 20.04.2003 ஞாயிறு காலை 9.00 மணிக்கு சட்டநாதர் வீதி, நல்லூரில் உள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் பாராட்டுவிழா நடைபெறும். அவ்வமயம் அவர்களிடம் சித்தவைத்தியம் கற்ற மாணவர்களும் வைத்தியர்களும் ஹோமியோபதி சங்க உறுப்பினர்களும் மாணவர்களும் விழாவில் கலந்துகொண்டு பாராட்டு தெரிவித்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

முன்னாள் சித்த ஆயுர்வேத பணிப்பாளர்
**வைத்திய கலாநிதி உரோமகேஸ்வரன்** DAMS. B.Sc.D.S.S
D.S. புவிராசன் D.I.M.S
*(வ.இ.ஹோமியோபதி சங்க உபதலைவர்)*
சி.சிவனேசன் R.I.M.P.M.P.H
*(வ.இ.ஹோமியோபதி பொருளாளர்)*

(16615)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.-021-222-2567

(16206)

## மாபெரும் மலிவு விற்பனை

ஈஸ்ரர் பண்டிகையை முன்னிட்டு
எமது மலிவு விற்பனை
20-04-2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சகல வகையான புடைவைகளையும்
விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்:

**லைற் புடவை நிலையம்**

410 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. : 222 2381

(C/27424)

## நெஞ்சகலா நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலராக மடியில் 08 - 09 - 1980



விதையாக மண்ணில் 17 - 04 - 1999

### செல்வி மேனகா சின்னத்துரை (மதி)

(தமிழழகி)

ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துயரம்
எம் வாழ்வு முடியும் வரை உன் நினைவில் வாழ்ந்திருவோம்.

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, தம்பி, தங்கை,
உறவினர்கள்.

A.V.றோட்,
அரியாலை.

(16819)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 - 12 - 1923



உதிர்வு 08 - 05 - 2001

### திருமதி இராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை

திதி 17-04-2003

அம்மா! ஆண்டு இரண்டு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் நினைவலைகள் நிழலாக எமைத் தொடர்கின்றன.

என்றும் உங்கள்
நினைவுகளுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

42/2, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(C/22423)

# புத்தாண்டுப் பலன் உங்களுக்கு எப்படி?

## துலாம்

(சித்திரை 3ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3ம் பாதம் முடிய)

செப்ரெம்பர் 24ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 23ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கும் இந்தப் பலன் பொருந்தும். துலா ராசி நேயர்களுக்கு இந்த வருடம் நினைத்த காரியங்களில் வெற்றி உண்டு.

வெளிநாட்டுப் பயணங்களும், வெளிநாட்டில் குடியமர்வதும் கூடும். ஜூலை மாதம் வரை குருபகவான் 10ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்வதால் குடும்பத்தில் கடந்த சில வாரங்களாக இருந்த கஷ்டங்கள் நீங்கி அனுகூலங்கள் அதிகரிக்கும். நண்பர்கள், சமயத்துக்கு உதவுவார்கள். லட்சியத்தை அடைய வேண்டுமென்று உறுதியோடு இருப்பவர்களுக்கு வெற்றி கிட்டும். உளவுத் துறையில் பணி புரிபவர்கள் வெற்றிகள் காண்பர்.

ஜூலை மாதம் வரை குருபகவான் ராஜ்ய ஸ்தானத்தில் இருந்து, பின்னர் லாப ஸ்தானமான சிம்ம ராசியில் சஞ்சரிக்கப்போகிறார். இதனால் அப்போதும் விசேஷமான பலன்களையே கொடுப்பார்.

சகோதர, சகோதரிகள் உறவு பலப்படும். சத்ருக்கள் மூலமாகவும் லாபங்கள் கிடைக்கும். சிலர் திருத்தலங்களுக்குச் சென்று தெய்வ தரிசனம் பெறுவார்கள். வேலையற்றவர்களுக்கு விடாமுயற்சியால் வெற்றி கிடைக்கும்.

திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும். செய்யும் தொழில், உத்தியோகம் போன்றவற்றில் மிகுந்த முன்னேற்றம் ஏற்படும். மனை, பூமி, வாகன லாபங்கள் உண்டாகும். 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற முதுமொழியை மறவாது செயற்படுங்கள்.

கடந்த காலத்தில் 8ஆம் இடத்தில் இருந்த சனிபகவான் உங்களைப் படாதபாடு படுத்திவிட்டாலும், துலா ராசிக்காரர்களுக்கு பெரிய அளவில் அவர் தீங்கு செய்யமாட்டார் என்பது நியதி. ஆகவே கடந்த வருடம் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு இந்த ஆண்டு ஈடுகட்டி லாபங்களையும், பலன்களையும் சனீஸ்வரர் அளிப்பார்.

காரணமில்லாத சண்டை, சச்சரவுகள் வந்தால் பேசித் தீர்த்து விடுவதே நல்லது. இவ்வருடம் குழந்தைகள் முன்னேற்றத்துக்காக அதிக நேரத்தைச் செலவிட நேரிடும்.

ராகு, கேது சஞ்சாரம் சற்று சாதகமாக இல்லாமையால் அநாவசிய செலவுகளும், வீண் முயற்சிகளும் செய்யும்படி சிலருக்கு நேரிடலாம். கணவன் மனைவியர் இடையே கருத்து வேறுபாடுகளும், அநாவசிய சந்தேகங்களும்கூட ஏற்படலாம். பொறுமையோடு சமாளித்து விடுங்கள். ஏப்ரல், மே மாதத்தில் வீடு, மனை போன்ற சொத்து விஷயங்களில் அனுகூலம் பிறக்கும்.

சந்தான சௌக்கியங்களும், மனதில் குதூகலங்களும் பெருகும். ஜூன் மாதத்தில் முயற்சிகளில் வெற்றி உண்டாகும். கூட்டு முயற்சிகளால் பண வரவு உண்டு. ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் திருத்தல யாத்திரைகளில் பங்கேற்பீர்கள். அப்போது தொழில், உத்தியோகங்களிலும் சாதகமான நிலைமை இருக்கும். பணப் பற்றாக்குறை பெருமளவு நீங்கி, வசதிகள் உண்டாகும்.

செப்ரெம்பர் மாதம் முதல் சுக சந்தோஷங்களும், குழந்தைகள் ஆரோக்கியத்தில் முன்னேற்றமும் ஏற்படும்.

நவம்பர், டிசெம்பர் மாதம் மட்டும் பொதுவாக எல்லா விஷயங்களிலும் நீங்கள் கவனமாக இருப்பது நல்லது. மேலே குறிப்பிட்ட மாதங்களைத் தவிர்த்து மற்ற மாதங்களில் வியாபாரத்தில் லாபப் போக்கே காணப்படுகிறது.

கணக்கியல் மாணவர்களுக்கும், விஞ்ஞானத் துறையினருக்கும் அறிவுத்திறன் பெருகும்.

அனைவருக்கும் வாகன சௌகரியம் கூடும். ஆனால் சரீர சுகம் குறையும். மாணவமணிகளுக்கு விசேஷமான வெற்றிகள் உண்டு. மருத்துவம், பொறியியல், கணிதம் மாணவர்களுக்கு இது வெற்றிகரமான வருடமாக இருக்கும்.

மளிகை, சிமெந்து, எண்ணெய், மரம், கறிகாய் வியாபாரிகளுக்கு ஜூலை மாதம் வரை யோககரமாகவே தென்படுகிறது. நிதி, பங்கு வியாபாரிகளுக்கும், பால், கோழி, ஆடு, மாட்டுப் பண்ணை வியாபாரிகளுக்கும், ஏப்ரல், மே, ஜூலை, ஒக்ரோபர், நவம்பர், ஜனவரி மாதத்தில் அதிகாரிகளின் நிர்பந்தங்களும் நண்பர்கள் தொந்தரவும் இருக்கும். ஆனால், இதர மாதங்கள் யோககரமாக இருக்கும்.

இந்த ராசிக்காரர்கள் சனிக்கிழமை விரதமும், அவ்வப்போது சிவதரிசனமும் செய்வது நல்லது. சந்திர சேகர அஷ்டகம், அன்னபூர்ணாஷ்டகம் பாராயணம் செய்வது உத்தமம். முருக வழிபாடும், ராகு, சந்திரன், சுக்ர பகவானுக்கு சாந்தி செய்வதும் சிறப்பைக் கூட்டும். சுந்தர காண்ட பாராயணம் செய்வதும் நல்லது.

பெண்கள் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை விரதமிருப்பதும் இஷ்ட தெய்வ பிரார்த்தனை செய்வதும் இல்லத்தில் சுபங்களை கூட்டும்; சந்தான பாக்கியத்தையும், முன்னேற்றங்களையும் அளிக்கும்.

6, 1, 4, 5, 8, 9 திகதியுடன் கூடிய ஞாயிறு, திங்கள், வெள்ளிக்கிழமைகள் இந்த ராசிக்காரர்களுக்கு யோககரமான நாள்களாகும்.

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

ஆங்கிலத் திகதிப்படி ஒக்ரோபர் 24 முதல் நவம்பர் 22இற்குள் பிறந்தவர்களுக்கும் இந்தப் பலன்கள் பொருந்தும்.

விருச்சிக ராசி நேயர்களுக்கு ஜூலை மாதம் வரை குரு பகவான் 9ஆம் இடத்திலும், பிறகு 10ஆம் இடத்திலும் சஞ்சாரம் செய்வது யோககரமானதென்றே கூறலாம்.

குரு பகவானின் 5ஆம் பார்வை விருச்சிகத்தில் இருக்கின்றது. குரு, 9ஆம் பார்வையாக விருச்சிகத்துக்கு 5ஆம் இடமாகிய மீன ராசியைப் பார்க்கிறார். இதனால் கெட்ட காலத்திலும் நல்ல காலம் என்பது போல் அஷ்டம சனி பிரபாவத்தினின்று பாதுகாக்கப்படுவீர்கள். இதனால் ஜூலை வரை வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவி கிட்டும். ஆசிரியர்களுக்கும், ஏற்றுமதி இறக்குமதித் துறையினருக்கு அதிக ஆதாயங்கள் ஏற்படும். ஜூலை மாதம் வரை இந்த ராசியைச் சேர்ந்த அனைத்து அன்பர்களுக்கும் நினைத்த வேலைகள் நினைத்தபடி விரைவாக முடியும். ஆன்மீகத்தில் ஆர்வம் வளரும்.

உங்கள் பாக்கியத்தில் நிச்சயமாக முன்னேற்றம் உண்டு. புதிய மனை, வீடு போன்றவை கட்டும் பாக்கியம் பலருக்கு ஏற்படும். இதனால் செலவுகள் அதிகரிக்கும். சிரமங்களும், அடிக்கடி பிரயாணங்களும், அலைச்சலும் இருந்தாலும் அவையாவும் முன்னேற்றத்துக்கே இட்டுச் செல்லும்.

ஜூலை மாதத்திற்குப் பிறகு உங்கள் வாக்கு ஸ்தானமான தனு ராசியை குருபகவான் 5ஆம் பார்வையாகப் பார்ப்பதனால் பொருளாதாரப் புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் லாபங்கள் கூடும். லட்சியங்களில் வெற்றி கிடைக்கும்.

வியாபாரத்தை விஸ்தரிக்கவும், புதிய கம்பெனிகளைத் தொடக்குவதற்கும், புதிய முதலீடுகள் செய்வதற்கும் இது சாதகமான காலகட்டம். ஊதியம் பல வகையில் மிகுந்து வரும். ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் மட்டும் எல்லா நடவடிக்கைகளிலும் சற்று கவனமாகவே இருக்கவேண்டும்.

சனி பகவான் மிதுன ராசியாகிய எட்டாமிடத்தில் இருப்பதால் அநாவசிய அலைச்சலும் செலவினங்களும், சற்று ஆரோக்கிய குறைவுகளும், கடன் தொல்லைகளும் இருக்கும். ஆயினும் சமாளித்து விடுவீர்கள். ஓய்வு பெற்றவர்களுக்கு பென்ஷன், சேமலாப நிதி போன்ற விஷயங்களில் சில சிக்கல்கள் ஏற்படலாம்.

ஜூன் மாதத்துக்குப் பிறகு கலைஞர்களுக்கும், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வேலையில் வேகங்கள் குறைந்து சற்று மந்தமான நிலை நிலவும்.

சனி சஞ்சாரத்தினால் செப்ரெம்பர் மாதத்திற்குப் பிறகு கால நேரத்தில் நித்திரை இல்லாத நிலைமையும், மனதில் கவலைகளும், மேல் அதிகாரிகளிடம் பயமும் உண்டாகலாம். சிலருக்கு வியாதி, ஆயுத சிகிச்சை ஏற்படலாம். குடும்பத்திலும் மருத்துவச் செலவு உண்டாகும்.

கடன் பளுவைக் கூட்டிக் கொள்ளாமல் இருப்பதும் நல்லது. ராகு கேது பிரபாவத்திலும் சில சங்கடங்கள் நேரிடலாம். ஆயினும் இறையருளால் எல்லாவற்றையும் சமாளித்து விடுவீர்கள்.

பொதுவாகவே இந்த வருடத்தில் பூமி, மனை மூலமாகப் பலருக்கு தன லாபங்கள் கூடும். இது நீண்ட காலத்துக்குப் பயன் தரத்தக்க வகையில் சாதகமாக அமையும்.

விவசாயிகளும், கூட்டு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களும், தோட்டப்பயிர் தொழிலாளர்களும் அற்புதமான பலன்களை எதிர்பார்க்கலாம்.

மாணவமணிகளுக்கு இந்த வருடம் சிற்சில தடங்கல்கள் தோன்றி மறையும். மறு தேர்வு எழுதபவர்களுக்கு வெற்றி கிட்டும். உத்தியோகஸ்தர்கள், மருத்துவர்கள், சட்டத்துறையினருக்கு மே, ஜூன், ஜூலை, ஓகஸ்ட், ஒக்ரோபர், நவம்பர், பெப்ரவரி மாதங்கள் தவிர ஏனைய மாதங்களில் விசேஷமான பலனும், பண உதவியும், லாபங்களும் ஏற்படும்.

மளிகை, காகிதாதி, நிதி, தானிய விற்பனை, புடைவை, வாகனப்போக்குவரத்து போன்ற துறைகளில் உள்ளோருக்கு மே, ஜூலை, செப்ரெம்பர், டிசெம்பர், ஜனவரி மாதங்களில் பண விரயம் அதிகமாக இருந்தாலும் ஏனைய மாதங்கள் லாபகரமாக இருக்கும்.

கோழி, பால் பண்ணை, மீன் போன்றவை சம்பந்தப்பட்ட வியாபாரிகளுக்கு ஜூலை மாதம் வரை லாபகரமாக இருக்கும். பங்கு மார்க்கெட்டில் ஈடுபட்டுள்ளோருக்கு படிப்படியான முன்னேற்றம் தென்படுகிறது. புதிய வியாபாரம் தொடங்க நினைப்பவர்களுக்கு இவ்வருடம் சாதகமாய் அமையும்.

இந்த ராசி நேயர்களுக்கு ஜூன், ஜூலை மாதத்தில் ஆரோக்கியக் குறைவு சற்று உண்டு. அப்போது பணத்தட்டுப்பாடும் இருக்கும். ஆயினும் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு இழந்ததை மீட்டும் தரும்.

சூரியன், சந்திரன், செவ்வாய், குருவை பூஜிப்பது நல்லது. சனிக்கிழமை விரதமிருப்பதும் துர்க்கைக்கு குங்கும அர்ச்சனை செய்வதும் சிறப்பு. பெண்கள் செவ்வாய், வெள்ளிக்கிழமை உபவாசமும், ராஜராஜேஸ்வரியையும், நவக்கிரகத்தில் சூர்ய பகவானையும் வழிபடுவதால் சுக சௌகர்யங்கள் கூடும். குடும்பத்தில் சாந்தி நிலவும்.

9, 1, 2, 7, 8 திகதிகளுடன் கூடி வரும் ஞாயிறு, திங்கள், வியாழன் போன்ற நாள்கள், இந்த ராசி நேயர்களுக்கு யோககரமானது.

## தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய)

ஆங்கிலத் திகதிப்படி நவம்பர் 23ஆம் திகதி முதல், டிசம்பர் 21ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கும் இந்த வருட பலன் பொருந்தும். தனுசு ராசி நேயர்களுக்கு தொழில், உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டு.

ஜூலை மாதம் வரை குரு பகவான் 8ஆம் இடத்தில் சஞ்சரித்துப் பின்னர் சிம்மத்தில் உங்கள் ராசிக்கு 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபகவானின் 8ஆம் இட சஞ்சார காலத்தில் எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாத நிலைமை இருந்தாலும் பிறகு காலம் சாதகமாக மாறும்.

ஜூலை மாதம் வரை உங்களுக்குச் சுமாரான நேரம்தான். செய்யும் தொழிலில், சூழ்நிலையை அனுசரித்துச் செயல்படுவதே நல்லது. பூமி, மனை லாபங்கள் உண்டு. ஆனால் அதேசமயம் அனாவசிய அலைச்சலும், காரியங்களில் தாமதமும், சரீர சிரமும் இருக்கத்தான் செய்யும்.

ஜூலை மாதத்திற்குப் பிறகு உங்களைப் பாதித்துக் கொண்டிருந்த பிரச்சினைகள் எல்லாம் நீங்கும் வாய்ப்பை பாக்கியஸ்தானத்துக்கு வரும் குரு பகவான் கொடுப்பார். சமூகத்தில் உங்கள் அந்தஸ்தும், மரியாதையும், பெருமையும் வளரும். அரசியல்வாதிகளுக்கு முன்னேற்றமும், கலைஞர்களுக்கு உன்னதமான வாய்ப்புகளும், எழுத்தாளர்களுக்கு நல்ல ஊக்குவிப்பும் உண்டாகும்.

சட்டத்துறையினருக்கும், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகளுக்கும் இந்த வருடம் சுப பலனையே தரும்.

குருவின் பாக்கிய ஸ்தான சஞ்சாரத்தாலும் பார்வை பலத்தாலும் எல்லா வகையிலும் பிரச்சினைகள் தீரும்.

ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதத்தில் தொழில் பிரச்சினைகள், காரணமில்லாத தொல்லைகள் வந்து போகலாம்.

ஆயின் இந்தக் காலகட்டத்தில் ராகு கேது சஞ்சாரம் மிகவும் சாதகமாகவே உள்ளதையும் குறிப்பிட வேண்டும்.

சனியின் 7ஆம் இடத்து சஞ்சாரத்தால் குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படும்.

பலருக்கு இந்தக் கால கட்டத்தில் புதிய நிலம், வீடு வாங்கும் யோகம் உண்டாகும்.

சட்டத்துறை, என்ஜினீயரிங், தொழிற்கல்வி பயிலும் மாணவமணிகளுக்கு முன்னேற்றம் தென்படுகிறது. ஆசிரியர்களுக்கும், ஏனைய துறையினருக்கும் முயற்சிகளில் வெற்றி உண்டாகும்.

நெல் பயிரிடுவோருக்கும் விற்போருக்கும் இது அனுகூலமான வருடம். எண்ணெய், மரம், சிமெந்து வியாபாரிகளுக்கு ஒக்ரோபர் மாதத்திற்குப் பிறகு நிலைமையில் முன்னேற்றம் தெரியும்.

நிதி, புடைவை, பழம், புஷ்பம், போக்குவரத்து பலசரக்கு வியாபாரிகளுக்கு மே, ஜூன், செப்ரெம்பர், நவம்பர், ஜனவரி தவிர ஏனைய மாதங்கள் நல்ல பலன்களைக் கொடுக்கும்.

இவ்வருடம் கூட்டு வியாபாரம் ஒத்து வராது. கலைத்துறையினர், சட்ட நிபுணர்கள், தொழிலாளிகள், மருத்துவத் துறையினர், சுய தொழிலாளர்களுக்கு புது வருட ஆரம்பத்தில் குழப்பங்கள் இருந்தாலும் பின்னர் நல்ல லாபங்கள் கிடைக்கும்.

இந்த ராசி நேயர்கள் அனைவருக்குமே பொதுவாக ஜூன், ஜூலை, செப்ரெம்பர், நவம்பர், டிசெம்பர், மார்ச் மாதங்களில் எதிர்பார்த்ததற்கு மாறான பலனே கிடைக்கும். ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் சிரமங்கள் இருந்தாலும் அதிக லாபங்கள் கூடி வரும்.

செப்ரெம்பர் மாதத்தில் நடவடிக்கைகளில் சற்று தடுமாற்றம் ஏற்படலாம். ஆயினும் இம்மாதத்தில் வியாபாரிகளுக்கு கொள்முதல், விற்பனையில் அதிக லாபத்தைக் காட்டுகிறது.

ஒக்ரோபர் நவம்பர் மாதங்களில் வேலை விவகாரங்களில் வெற்றியும், தன லாபமும், அனைத்து உத்தியோகஸ்தர்களுக்கும் முன்னேற்றமும், புதிய உத்தியோக வாய்ப்புகளும் தென்படுகின்றன.

டிசெம்பர் மாதம் அனைவரும் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. அப்போது மனதிற்கு அதிருப்தி தரும் சொல் கேட்க நேரிடும். ஜனவரி மாதம் குரு வக்ர கதியினால் நல்ல சுப பலனையே எதிர்பார்க்கலாம். ஏனைய மாதங்களில் குடும்பத்திலும், வியாபாரத்திலும், தொழில் அரங்கத்திலும் வெற்றி வாய்ப்புகள் கூடும். இந்த ராசி நேயர்கள் புதன், ராகுவுக்கு பூஜை செய்ய வேண்டும்.

ருத்ராபிஷேகம் நடத்துவது நல்லது. லட்சுமி அஷ்டோத்ர பாராயணமும், சூரிய நமஸ்காரம் செய்வதும் அனுகூலம் தரும். அல்லது சுந்தரகாண்ட பாராயணமும் செய்யலாம். தட்சிணாமூர்த்தியை வழிபட்டால் அதிகபட்ச லாபங்கள் கிடைக்கும்.

பெண்கள் சனிக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் விரதமிருப்பது நல்லது. அவர்கள் விநாயகர், தட்சிணாமூர்த்தி, ஸ்ரீராமபிரான், முருகனை வழிபட்டால் ஆரோக்கிய விருத்தி கூடும்; கடன் தொல்லை தீரும்.

3, 2, 5, 7, 8 இந்தத் திகதிகளுடன் கூடி வரும் ஞாயிறு, புதன், வியாழக்கிழமைகள் இந்த ராசிக்காரர்களுக்கு யோககரமாக இருக்கும். (வளரும்)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

யாழ்.நகரிலிருந்து 3 மைல் சுற்றாடலுக்குட்பட்ட இடத்தில் வீடு அல்லது காணி தேவை. தொடர்பு: 0777 722215.

(16750)

### தவறிவிட்டது

ஜோண் அன்ரனி கிளைவ் - பெலனியா என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.727261931V)யும் விசேட அடையாள அட்டையும் யாழ் நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 57, மாவுன்கார் மேல் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(16838

இல.05, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியைச் சேர்ந்த க.கிஷோககுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (830813020V) திருநெல்வேலி, நீராவியடிக்கும், கச்சேரிககும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.136, கண்டி வீதி, சுண்டுக்குளி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(16848)

பலாலி கிழக்கை முகவரியாகக் கொண்ட செல்வராணி சுப்பிரமணியம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (796533358V), விசேட அடையாள அட்டை என்பன 13ஆம் திகதி யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் S.பாலச்சந்திரன் பன்னாலை, தெல்லிப்பழை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது 0777 731819இற்கு தகவல் தரவும்.

(16825)

### வகுப்புகள்

தமிழ்/ஆங்கில Computer Typing, தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கிலம், Ms Office தனிப்பட்ட கவனிப்பு. பகல், இரவு வகுப்புகள். 37(149), சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (16857)

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**
**நான்கு சில்லு உழவு இயந்திரத்திற்கான**
**வெள்ளிரும்பு நீர்த்தாங்கி செய்து வழங்குவதற்கான**

## கூறுவிலை

எமது சபைக்கு நான்கு சில்லு உழவு இயந்திரத்திற்கான வெள்ளிரும்பு நீர்த்தாங்கி செய்து வழங்குவதற்கான கூறுவிலை என்னால் கோரப்படுகின்றது.

1) கூறுவிலை 30-04-2003ஆம் திகதி நண்பகல் 12.00மணிக்கு முன்னர் செயலாளர், பிரதேச சபை, ஊர்காவற்றுறை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

2) இதற்கான மாதிரி மற்றும் விவரங்களை அலுவலக நேரங்களில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

*ஊர்காவற்றுறை பிரதேச சபை,*
*தலைமை அலுவலகம், ஊர்காவற்றுறை.*
15-04-2003

(C/27446)

---

MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

## RAMCO CEMENT
## ராம்கோ சிமெந்து

இலங்கையில் மட்டுமா இல்லை! இந்தியாவில் மட்டுமா இல்லவே இல்லை!

ஆசியாவின் முதலாம் தர (நம்பர் I) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் சிமெந்து ராம்கோ சிமெந்து (கோபுர மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இந்தியாவில் விற்பனையில் முதல் தர சிமெந்து ராம்கோ சிமெந்து.**

SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 9002 தரம் பெற்றது
BSS - 12 - 1991 தரத்திற்கு அமைவானது

தற்பொழுது ராம்கோ சிமெந்து பருத்தித்துறை இறங்கு துறையில் இறக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

குறிப்பு:-
☆ முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும்.
☆ குடாநாட்டு மக்களின் பலகோடி ரூபா பணத்தை மீதப்படுத்திய முதலாம் தர சிமெந்து ராம்கோ சிமெந்து.

*ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர்கள்:-*

**ஈஸ்வரபகவான் & கொம்பனி**
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No.:- 021-222 2350

(C/27442)

---

## கேள்வி அறிவித்தல்

### பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்

01 கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால், 2003 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 07ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிவரை யாழ்ப்பாணம், பிரதம பொறியியலாளர் (மாகாணம்), கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

02 நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேல் உள்ள தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கு தகுதியுடையோராவர்.

03 ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் ( மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04 தகுதி உடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரங்களை 2003ஆம் ஆண்டு வைகாசி மாதம் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்று பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| | வேலை விவரம் | பதிவு சேரும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| 01. | சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம் நிர்மாணித்தல் கோப்பாய். | எம் - 8 | ரூ.15,000/- | ரூ.500/- |
| 02. | ஸ்ரீ பரமானந்தா சிறுவர் இல்லம் நிர்மாணித்தல் கரவெட்டி. | எம் - 9 | ரூ.6,000/- | ரூ.250/- |
| 03. | அரச முதியோர் இல்ல எழுதுவினைஞருக்கான விடுதி நிர்மாணித்தல், கைதடி | எம் - 9 | ரூ. 5,000/- | ரூ. 250/- |

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்று பொறியியலாளரிடமிருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எந்திரி.சு.சுந்தரகுமார்
பிரதம பொறியியலாளர்,
யாழ்ப்பாணம்.

*பிரதம பொறியியலாளர் அலுவலகம்,*
*கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)*
*கடற்கரை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி/27432)

---

## பிற்போடப்பட்டுள்ளது

சித்திரை வருடப்பிறப்பன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. இது எதிர்வரும் 16.05.2003 வைகாசி விசாகத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

தலைவர்,
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய
பரிபாலன சபை.

(16856)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15 - 05 - 1935



மறைவு 18 - 03 - 2003

### திருமதி கதிரவேலு செல்வவதி
(சிதம்பரம்)
**17.04.2003**

*பாசமுடன் எம்மை வளர்த்த பரிவான அன்னையே!*
*நேசமுடன் எம்வாழ்வை வளமாக்கி வைத்தீரே!*
*வாடி நிற்கின்றோம் வண்ணமுகம் காணாமல்*
*சிறகிழந்து தவிக்கின்றோம் மீண்டு வரமாட்டாயோ?*
*பாவிகளாய் பேயாரினில் பரிதவித்து நிற்கிறோம்.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நிரந்தர முகவரி: *2ஆம் குறுக்குத் தெரு, காங்கேசன்துறை.*
தற்காலிக முகவரி: *சேச் லேன், கொக்குவில்.*
தகவல்: பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(16836)

---

## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 26 - 12 - 1948



உதிர்வு 28 - 04 - 2002

### அமரர் கணபதி ஜீவகாருண்ணியம் B.A.
(நிறைவேற்று அதிகாரியும், உதவி முகாமையாளரும் வ.பி.போ. சபை, காரைநகர் சாலை)

திதி: 17.04.2003

இன்றுடன் ஓராண்டு ஆனதையா
இன்னமும் வேதனைகள் சோதனைகள் தீரவில்லை!
இறைவன் என்னை ஏன் படைத்தான்
இன்றுவரை கண்ணீரில் கரைகின்றேன்.
ஏங்கித் தவிக்கின்றேன் இதயம் தாங்குவதாயில்லை
என்று உங்களிடம் வந்து சேருவேன்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஸ்ரீ நாகபூசணி அம்மனை வேண்டி நிற்கின்றேன்.

*இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

திருமதி செ.ஜீவகாருண்ணியம்
மனைவி

(16852)

---

## மரண அறிவித்தல

### செல்லத்துரை நடராஜா
(ஓய்வுபெற்ற ஆசிரியர், யூனியன் கல்லூரி)

ஐயனார் வீதி, கட்டுவனைப் பிறப்பிடமாகவும் விளையாட்டு அரங்கு வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நடராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) அவர்கள் 16.04.2003 புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் செல்லத்துரை சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் கண்மணியம்மாவின் பாசமிகு கணவரும் நகுலேஸ்வரி (ரஞ்சி - கனடா), சிவலோகநாதன் (ஞானி - சுவிஸ்), கிருபாகரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கிருஷ்ணகுமார் (கனடா), சுசீலா(சுவிஸ்), நந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கீர்த்திகா, சர்மிளா, டினோஜா, சங்கர், கீர்த்தன், அஜித்தன், துளசி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் காலஞ்சென்ற பொன்னம்பலம், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, கனகரத்தினம் (கனடா), சுந்தரலிங்கம்(கனடா), பொன்னம்மா, சின்னாச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற செல்லாச்சிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரரும் செல்லையா, வெற்றிவேலு, அன்னலட்சுமி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், இராசம்மா, சந்திரா (கனடா), தேவி (கனடா), கந்தையா, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.04.2003) புதன்கிழமை கல்வியங்காட்டு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*விளையாட்டு அரங்கு வீதி, கல்வியங்காடு.*

தகவல்:
சுண்மணியம்மா
(மனைவி)

(16854)

# இராணுவத்தை 5 ஆண்டுகள் ஏமாற்றி வாழ்ந்த போலி கப்டன்!

**இராணுவத் தலைமையகம் மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் சுதந்திரமாக நடமாடி இராணுவக் கட்டமைப்பையே கலக்கியடித்துவிட்டார் டயஸ் என்ற போலி இராணுவ அதிகாரி, இந்தச் சம்பவத்தின் பின்னர் விடுதலைப் புலிகளின் உளவாளிகள் இராணுவத்திற்குள் ஊடுருவியிருக்கலாம் என்ற சந்தேகத்தல் அதிகாரிகள் தலைகளைப் பிய்த்துக்கொண்டிருக்கின்றனர். டயஸின் திருவிளையாடல்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.**

தலைநகர் கொழும்பிற்கு அண்மையில் அமைந்துள்ள மொரட்டுவப் பகுதியில் ஆண்கள் உயர் கல்லூரியில் கல்விகற்ற டயஸிற்கு சிறுவயதிலிருந்து ஓர் ஆசையிருந்தது. அதாவது, என்றோ ஒருநாள் இராணுவத்தில் அதிகாரி பதவியை வகிக்க வேண்டும் என்பதே அந்த ஆசையாகும். இந்தக் காரணத்தால் பாடசாலை நாள்களில் டயஸ் பாடசாலையின் 'கடேற்' பிரிவு மற்றும் சாரணர் பிரிவு ஆகியவற்றில் உறுப்பினராக ஆர்வமுடன் செயற்பட்டனர்.

இருப்பினும் ஜி.சீ.ஈ. பரீட்சையில் திறம்படச் சித்திபெய்தத் தவறியதால் டயஸின் கனவு சிறிதுசிறிதாக விலகிக்கொண்டிருந்தது. கல்வித் தகைமை போதாமையால் முக்கியமான நிரந்தரப் பதவிகள் அவருக்குக் கிடைக்காமற் போயின. இருப்பினும் ஏதோ ஒரு வேலையைத் தேடி தனது வாழ்க்கையைப் போக்கவேண்டிய சூழ்நிலை உருவானது.

1998 இல் நுகேகொடப் பகுதியில் டயஸ் தனது பழைய நண்பன் ஒருவரைச் சந்தித்தார். பாடசாலை நாள்களில் அவர்கள் இருவரும் இணைபிரியா நண்பர்கள்.

"மச்சான், வாழ்க்கை எப்படிப் போகிறது? இப்போது நீ என்ன வேலை செய்கிறாய்?" என நண்பனிடம் டயஸ் கேட்டார்.

"நான் இராணுவத்தில் பணியாற்றுகிறேன்" என நண்பன் பதிலளித்தான்.

"இராணுவத்தில் என்ன பதவி"

"நான் இராணுவக் கப்டனாகப் பணியாற்றுகிறேன்"

- இவ்வாறு நண்பர்கள் இருவரிடையே இடம்பெற்ற உரையாடல் மீண்டும் குறிப்பிட்ட இராணுவ விடுதியில் சந்திப்பது என்ற முடிவுடன் முடிவுற்றது.

குறித்த தினத்தன்று டயஸ் எடுப்பாக உடையணிந்து இராணுவ விடுதிக்கு வந்தான். அங்கு நண்பனான இராணுவக் கப்டன் டயஸை நன்கு வரவேற்று உபசரித்தார்.

பாடசாலை நாளகளில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது 2,3 என மதுப் போத்தல்கள் காலியாகிக் கொண்டிருந்தன. அவ்வேளையில் இராணுவக் கப்டன், விடுதியில் இருந்த ஏனைய இராணுவ அதிகாரிகளுக்கு டயஸை அறிமுகப்படுத்திவைத்தான். இராணுவக் கப்டனான தனது நண்பனைச் சந்தித்ததைத் தொடர்ந்து இராணுவ அதிகாரியாக வரவேண்டும் என டயஸிற்கு இருந்த ஆசை மீண்டும் துளிர்விடத் தொடங்கியது.

இராணுவத்தில் கீழ்மட்டங்களில் உள்ளவர்கள் தனது நண்பனான கபடனுக்கு அளித்த மரியாதையைக் கண்ட டயஸின் மனதில் இராணுவத்தில் சேர்வது பற்றிய ஆசை மேலோங்கியது.

1998 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இதன் முதற்கட்டம் ஆரம்பமானது. இராணுவ அதிகாரிகளின் பதவிகள் குறித்த ஆராய்ச்சிகளில் டயஸ் இறங்கினான். பணாகொடப் பகுதியில் இராணுவத்திற்குச் சீருடைகளைத் தைக்கும் தையல்காரனை டயஸ் சந்தித்தான். தன்னை இராணுவக் கப்டன் எனக்கூறி அதற்குரிய சீருடையைத் தைத்துத் தருமாறு டயஸ் கூறினான். கொழும்பு கோட்டைக்குச் சென்று அந்தச் சீருடைக்குப் பொருத்தமான இராணுவப் பட்டிகளை விற்பனைக்கடைகளில் இருந்து தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் தேவையான விதத்தில் இராணுவச் சப்பாத்துக்களைப் பெற வசதிகள் இருந்ததால் பொருத்தமான சப்பாத்துகளைப் பெறுவதில் டயஸுக்கு சிரமம் ஏற்படவில்லை.

இவை யாவற்றையும் பெற்றுக் கொண்ட போதிலும் இராணுவ அதிகாரி போல் தோன்றுவதற்கு மேலும் சில தேவைகள் இருந்தன. அவற்றுள் ஒன்று இராணுவ அடையாள அட்டை. இதற்கு கணனித் தொழில்நுட்பத்தை டயஸ் பயன்படுத்தினான். இராணுவ அதிகாரிக்கான அடையாள அட்டையும் தயாரிக்கப்பட்டுவிட்டது. போலியாக "ரபர் சீல்" தயாரிக்கப்பட்டது. இராணுவத்தில் பணியாற்றும் மூத்த இராணுவ அதிகாரியின் கையொப்பம் போன்று போலிக் கையொப்பமும் இடப்பட்டது. "லெமனேற்" கவர் போடப்பட்டதுடன் அடையாள அட்டை தயாரிக்கும் பணிகள் முடிவடைந்தன.

இந்த வேலைகள் இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் வாரத்தில் இரண்டு மூன்று தடவைகள் இராணுவ விடுதிக்கு டயஸ் தவறாமல் சென்று வந்தான். ஆரம்ப நாள்களில தனது நண்பனின் கணக்கில் அங்கிருந்த மதுபானச்சாலையில் மது அருந்தி வந்தான். அங்கு வரும் பல தரப்பட்ட இராணுவ அதிகாரிகளுடன் மதுவருந்தி அவர்களுடன் ஒட்டி உறவாடினான்.

டயஸின் தந்தையின் நண்பர் ஒருவர் இராணுவத்தில் மேஜராகப் பதவி வகித்தார். அந்த மேஜரும் டயஸின் நண்பனின் இராணுவ விடுதிக்கு வந்து பொழுதைப் போக்குவது வழக்கம். எனவே இராணுவ விடுதிக்குச் சென்று வருவதில் டயஸுக்கு எதுவித கூச்சமோ, பயமோ ஏற்படவில்லை. நாள்கள் செல்லச்செல்ல டயஸ் இராணுவ உயர் அதிகாரிகளின் செலவில் உண்டு குடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் டயஸின் இவ்வாறான நடவடிக்கைகள் எவற்றையும் அவனது நண்பனான இராணுவ அதிகாரி அறிந்திருக்கவில்லை.

காலப் போக்கில் இராணுவ விடுதிக்கு வரும் உயர் அதிகாரிகள் மாத்திரமன்றி கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகளும் டயஸுக்கு நண்பர்களாயினர். அவர்களுடன் இராணுவத் தலைமையகத்திற்குச் சென்று சுதந்திரமாக நடமாடும் வழக்கத்தை டயஸ் உருவாககிக் கொண்டான்.

இராணுவத் தலைமையகத்தில் சுதந்திரமாக நடமாடிய டயஸ் அங்குள்ளவர்களுக்குத் தான் பாதுகாப்பு அமைச்சின் புலனாய்வு அதிகாரி எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவ்வேளையில் இராணுவத் தலைமையகத்தில் டயஸ் நுழையாத இடம் ஏதும் இருக்கவில்லை.

போலியாகத் தயாரிக்கப்பட்ட சருடை, போலி இராணுவ அடையாள அட்டை ஆகியவற்றுடன் எந்த நேரத்திலும் இராணுவத் தலைமையகத்திற்கோ அல்லது வேறு இடங்களுக்கோ அவன் செல்லத் தவறுவதில்லை. அவனது சீருடையில் விசேட புலனாய்வு அதிகாரி என்ற பட்டி பொருத்தப்பட்டிருந்தது. இதனால் எவருக்கும் அவன் மீது சந்தேகம் எழவில்லை. கப்டன் பதவிக்கு கீழ் மட்டத்திலுள்ளோர் டயஸைக் கண்டதும் அளித்த மரியாதையால் டயஸ் பூரித்துப் போனான்.

இராணுவ வாகனங்களில் டயஸ் அங்குமிங்கும் சென்றுவந்தான். இராணுவ அதிகாரிகளின் ஒன்றுகூடல்களுக்கு டயஸிற்கும் அழைப்புக்கள் வந்தன.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவுடன் சரிசமமாக டயஸ் விருந்துகளில் கலந்துகொண்டான். டயஸின் நணபர்களும் உறவினர்களும் டயஸ் இராணுவத்தில் கப்டனாகப் பணியாற்றுகிறான் என்றே நம்பினர்.

வேலை ஏதுமின்றி நொந்து போயிருந்த டயஸிற்கு இந்த நாடும் அரசும் ஏதோ ஒரு விதத்தில் உரிமையாகின. மிகவும் சூட்சுமமாத் தயாரிக்கப்பட்ட இந்தத் திட்டத்தால் அவன் பல சலுகைகளை அனுபவித்தான். தனது *திட்டம் பற்றிய தகவல்கள் எதுவிதத்*திலும் வெளியே கசியாத வகையில் அவன் நடந்து கொண்டான்.

இதற்கிடையில் தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் கொழும்பிலுள்ள உலக வர்த்தக மையக் கட்டடத்தில் அமைந்துள்ள இராணுவ அதிகாரிகளின் விடுதிக்கு டயஸ் சென்றுவரத் தவறுவதில்லை. படிப்படியாக அங்கு வரும் அதிகாரிகளுடன் நட்புறவை ஏற்படுத்திய டயஸ் அங்குள்ள அறையொன்றில் தங்கும் வசதியையும் பெற்றுக்கொண்டான்.

**தமிழில்: கஜனி**

இராணுவத் தலைமையகத்தில் அமைந்துள்ள உணவு விடுதிக்கும் அடிக்கடி டயஸ் சென்று வந்தான். அங்கு உணவையும் மதுபானத்தையும் பெறுவதை வழக்கமாக்கிக் கொண்டான்.

இராணுவத் தலைமையகத்திலுள்ள உணவு விடுதி, உலக வர்த்தக மையத்திலுள்ள இராணுவ அதிகாரிகளின் விடுதி மற்றும் 'வேறு இடங்கள் ஆகியனவற்றில் வேறு இராணுவ அதிகாரிகளின் பெயர்களையும், பதவிகளையும் பயன்படுத்தியே டயஸ் சலுகைகளை அனுபவித்து வந்தான். *அவன் பெற்ற உணவு மற்றும்* மதுவகைகளுக்கான கட்டணங்கள் வேறு அதிகாரிகளின் சம்பளத்திலேயே கழிக்கப்பட்டன.

- இவ்வாறு சுமார் 5 வருடங்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தை ஏமாற்றிய டயஸ் சுமார் நாலரை ஆண்டுகள் உலக வர்த்தக மையத்தில் அமைந்துள்ள இராணுவ அதிகாரிகளின் விடுதியில் தனக்கென ஓர் அறையைப் பெற்று சலுகைகளையும் அனுபவித்து வந்தான். இந்த ஏமாற்றுக்காரன் பற்றிய தகவல்கள் சுமார் 5 ஆண்டுகளின் பின்னர், அதாவது கடந்த மாதப் பிற்பகுதியிலேயே கசியத் தொடங்கின.

யாழ்ப்பாணம் மற்றும் கொஸ்கொடப் பகுதிகளில் கடமையாற்றும் இரு இராணுவ அதிகாரிகளின் பெயரில் இராணுவத் தலைமையகத்திலுள்ள உணவு விடுதியில் இரண்டு மூன்று மாதங்களாக டயஸ் உணவு மற்றும் மதுவகைகளைப் பெற்றிருந்தான். அந்தக் கால எல்லைக்குள் மேற்குறித்த அதிகாரிகள் இராணுவத் தலைமையகத்திற்குச் சென்றிருக்கவில்லை. அந்த இரு அதிகாரிகளின் சம்பளத்தில் உணவு மற்றும் மதுவகைகளுக்காக கழிப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதனைக் கண்ணுற்ற அந்த இரு அதிகாரிகளும் குழப்பமடைந்ததுடன் அதுகுறித்து முறைப்பாடுகளைச் செய்தனர்.


ஆரம்ப விசாரணைகளின் போது ஏதோ மோசடி இடம்பெற்றுள்ள விடயம கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விசாரணைகள் இராணுவ பொலீஸ் விசேட பிரிவிடம் கையளிக்கப்பட்டன.

நீண்ட நாள்கள் மேற்கொண்ட விசாரணைகளின் பயனாக டயஸ் எனும் போலி இராணுவக் கப்டனை நீதியின் முன் நிறுத்த முடிந்தது. டயஸ் உடனடியாகக் கைதுசெய்யபபட்டான். உலக வர்த்தக மையத்தில் அவன் தங்கியிருந்த அறை சோதனையிடப்பட்டது. அதுவரை இராணுவத்தை ஏமாற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட போலி அடையாள அட்டை, போலி இராணுவச் சீருடைக[ள் ஆ]கியன இராணுவப் பொலீஸார[ால் கைப்]பற்றப்பட்டன.

நீண்ட விசாரணைகளு[க்குப் பின்]னர் அவன் கொழும்பு கோட்டை [பொ]லீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான். டயஸ் மேற்கொண்ட குற்றங்கள் சிவில குற்றங்கள் என்பதால் அவன் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவத் தலைமையகத்திலுள்ள கீழ்மட்ட அதிகாரிகளில் இருந்து இராணுவத் தளபதிவரை - பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் வரை உஷாரடைந்தனர்; தலைகளைப் பிய்த்துக் கொண்டனர். இத்தகைய போலி அதிகாரி ஒருவரால் இராணுவ தலைமையகத்தில் சுமார் 5 ஆண்டுகள் எவ்வாறு நடமாட முடிந்தது என்பதற்கு அவர்கள் இன்னும் பதில் தேடி முடியவில்லை. இந்நிலையில், இராணுவத்துக்குள் புலிகளின் உளவாளிகள் எத்தனை பேர் ஊடுவி இருப்பார்கள் என்ற அச்சம் இராணுவத்தை, பீடித்துள்ளது.

# சாயி சிந்தனை



## அவதார நோக்கம்

அவதாரங்கள் நோக்கமின்றி ஏற்படவில்லை. நோக்கத்துடன் தான் உருவாகின. மனிதனாகப் பிறப்பது மிகவும் அரியது.அத்தகைய மனிதப் பிறவியை உயர்ந்ததாக,சிறந்ததாக 'இவ்வழியை பின்பற்றுங்கள்' என வழிகாட்ட ஏற்பட்டவையே அவதாரங்கள். ஆகவே கிருஷ்ண ஜன்மாஷ்டமி ஸ்ரீராம ஜன்ம நவமி இவை எல்லாம் நம் பொறுப்பை நினைவூட்டவே ஏற்பட்ட தினங்கள். பசு எங்கெல்லாம் பசுமை இருக்கிறதோ அங்கெல்லாம் விரைந்தோடும். புல்லை விரைந்து விரைந்து உட்கொள்ளும். பிறகு தன்னிடத்திற்குப் போய் நிதானமாக அசைபோடும். அதே போல இம்மாதிரியான புனித தினங்களில் பவித்திரமான உள்ளுணர்வை உருவாக்கிக் கொள்ளுங்கள். பின்பு உங்களிடத்திற்கு சென்று இவற்றை எல்லாம் மனதில் நினைத்த வண்ணம் புனித நினைவுகளை அசைபோடுங்கள்.நீங்கள் கேட்டதை மறந்து விடாதீர்கள் திரும்பிச் சென்ற பின் இந்த நினைவுகளை மீண்டும் கண்முன்னே கொண்டு வாருங்கள்.பிறகு, இவற்றை நடைமுறைப்படுத்துங்கள். பழக்கத்தில் இவற்றை கொண்டு வருதல் மிகவும் அவசியமானது. ஆகவே; ஒவ்வொரு மனிதனும் தெய்வ வடிவமே!எது செய்தாலும் இறைவன் பணியே! நிரந்தரமாக தெய்வசிந்தனை செய்து காலத்தைப் புனிதமாக்கிக் கொள்ளுங்கள். *(ஆதாரம்: சனாதனசாரதி)*

# கலாசார மண்டபத்துக்கு மேலும் நிதி உதவி

வடமராட்சி,ஏப்.17

அல்வாய், வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோவிலில் புதிதாக அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் ஒன்றரை லட்சம் ரூபா காசோலையை கோவில் பரிபாலன சபையிடம் வழங்கினர்.

சுமார் 25 லட்சம் ரூபா. செலவில் கட்டி முடிக்கப்பட்ட கலாசார மண்டபத் திறப்புவிழா, அதிபர் கி.நடராசா. தலைமையில் சித்திரை புதுவருடப் பிறப்பன்று நடைபெற்றது. அமைச்சர் மகேஸ்வரன் கலாசார மண்டபத்தைத் திறந்துவைத்தார்.

அமைச்சர் மகேஸ்வரன் அங்கு உரையாற்றுகையில், "இக்கலாசார மண்டபத்திற்கு குளிரூட்டி வசதிகளை ஏற்படுத்தித் தருவதோடு, இம் மண்டபத்தில் இப்பகுதி மாணவர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்க தேவையான கணனிகளையும், பயிற்றுவிப்பதற்கான அனைத்துச் செலவுகளையும் இந்து கலாசார அமைச்சு வழங்கும்" என உறுதியளித்தார். (ஐ-173)

## ஆசிரியர் சங்கக் கூட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்மாவட்ட தாய்ச் சங்க நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், வலயச் சங்கம், கிளைச்சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கான கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார்.

## சனசமூக நிலைய சமாசத் தெரிவு

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களிற்கான சமாசம் தெரிவுசெய்யப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைச் செயலர் அறிவித்துள்ளார்.

மேற்படி தெரிவானது எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கொக்குவில் உப அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறுமெனவும் - சனசமூக நிலையங்களின் சமாசப் பிரதிநிதிகளை இதில் கலந்துகொள்ளுமாறும் - நல்லூர் பிரதேச சபைச் செயலர் செ.செல்வரத்தினம் கேட்டுள்ளார்.

## வடமராட்சியில் இருவருக்கு 10ஏ

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ சதாரணதரப் பரீட்சையில், கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியைச் சேர்ந்த இனோதாரணி தெய்வபுலேந்திரா, இ.சௌமியா ஆகிய இரு மாணவிகளும் 10ஏ பெற்று சித்தியடைந்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியில் இக்கல்லூரியைச் சேர்ந்த இவர்களே 10ஏ சித்திபெற்றவர்களாவர். (ஒ-173)

# குருத்துவத்தின் பணி

தவக்காலத்தின் முக்கிய நாளாகிய இன்றைய திருச்சடங்கிலே இரு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதில் தலைமுறை தலைமுறையாக ஏற்படுத்தப்பட்டுவரும் முக்கிய கருத்து குருத்துவம் என்பதாகும். குருத்துவம் என்பது. திருப்பலி நிறைவேற்றுதல் மட்டுமல்ல. அதற்கு மேலாக ஒவ்வொரு இறை மக்களுக்கும் "பணிந்து ஊழியம் செய்தலே" இறை இயேசு குருத்துவத்தின் மேலான பணி என குறிப்பிட்டிருக்கிறார்.

**தவக்காலச்சிந்தனை**
**-16ஆம் நாள்-**

புனித யோவான் நற்செய்தியில் இயேசு தனது சீடர்களின் கால்களை, கழுவித் துடைத்து முத்தமிட்டதன் மூலம் "நான் உங்களுக்கு ஒரு முன மாதிரிகை காட்டியுள்ளேன். நீங்கள் என்னை ஆண்டவரும் போதகரும் என்கிறீர்கள். உண்மைதான். நான ஆண்டவர்தான், போதகர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நான் உங்களின் பாதங்களைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒவ்வொருவருடைய பாதங்களை கழுவுங்கள்" என்றொரு புதிய கட்டளையை தனது வழிவந்தவர்களான குருக்களுக்கும் இறைமக்களுக்கும் ஓங்கிக் குரலெழுப்பிக் கூறுகின்றார்.

**கொலிந்திரன்**

இன்றைய திருச்சபை பணியாளர்கள் பணிந்து ஊழியம் செய்தலா? அல்லது திருச்சடங்குகளை மட்டும் நிறைவேற்றுதலா முக்கியமான பணி என சிந்தியுங்கள், செயற்படுத்துங்கள். ★

# கணனிப் பயிற்சித்திட்டம்

வலி.வடக்கு,ஏப்.17

புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் மனிதவள அபிவிருத்திப் பிரிவின் கணனிப் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

நான்கு மாதங்களைக் கொண்ட இப்பயிற்சி மூன்று கட்டங்களாக நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறி பருத்தித்துறை, சாவகச்சேரி, நல்லூர், சங்கானை, ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இடம்பெறவுள்ளன.

பிரதேச செயலாளர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து ஒரு தடவையில் பயிற்சிக்குத் தலா 20 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

மேற்படி பயிற்சி நெறியில் கலந்து கொள்பவர்கள் கிராமிய நல்லிணக்கக் குழுவின் அனுசரணையுடன் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-86)

# உலகக் கிண்ண உதைபந்தாட்ட வெற்றி மாரடைப்பு மரணத்தைக் குறைக்கும்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெறுவதால் ஒரு நாட்டின் உத்வேகம் உயர்வதோடு மட்டுமன்றி மாரடைப்பு மரணத்தன் எண்ணிக்கையையும் இது குறைக்கிறதாம். இத்தகவல்களை மருத்துவர்கள் லண்டனில் தெரிவித்தனர்.

1998 ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடைபெறற போது அதற்கான இறுதிப் போட்டியில் பிரேஸில் அணியை தோற்கடித்து பிரான்ஸ் வென்றது.

இந்தப் போட்டியை பிரான்ஸ் நாட்டு தொலைக்காட்சியில் 2 கோடியே 60 லட்சம் மக்கள் அன்றைய தினம் கண்டு களித்தனர். இறுதிப்போட்டி நடந்த நாளில் மட்டும் மாரடைப்பு மரண எண்ணிக்கை கணிசமாகக் குறைந்ததாம்.

ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் மாரடைப்பில் இருந்து தப்பினார்களாம். இந்தப் போட்டி நடைபெறுவதற்கு முன்னும், பின்னும் ஒரு நாளில் 35 பேர் மாரடைப்பால் பலியாகியிருக்கிறார்கள். ஆனால், போட்டி நடந்த அன்று 23 பேர்தான் பலியாகியிருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும் ஆண்கள். பெண்கள் மத்தியிலும் அன்றைய தினம் மாரடைப்பு மரணம் குறைந்திருக்கிறது. இது பற்றிக் கூறிய மருத்துவர் பிரட்ரிக் பெர்தியர், மரண எண்ணிக்கை குறைந்தது ஏன்? என்பது பற்றி உறுதியாகச் சொல்ல முடியாது. இருந்தாலும் கூட பதற்றம் குறைந்ததன் காரணமாக இவ்வாறு மரண எண்ணிக்கை குறைந்திருக்கலாம் என்று தெரிவித்தார்.

# தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரருக்கு 6 போட்டிகளில் பங்குபற்றத் தடை!

தென்னாபிரிக்கக் கிரிக்கெட் வீரர் அன்ரூ நெல் 6 போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க 'ஏ' அணியின் ஆஸ்திரேலிய சுற்றுலாவின் போது மதுபோதையுடன் வாகனம் வெலுத்தியமையே இதற்குக் காரணம்.

ஆஸ்திரேலியாவின் ஹோபார்ட் நகரப் பொலீஸார் கடந்த வெள்ளியன்று மதுபோதையுடன் வாகனம் செலுத்தினார் என்ற சந்தேகத்தில் அன்ரூ நெல்லைக் கைது செய்தனர்.

பின்னர் அணி நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நெல், தென்னாபிரிக்காவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

அன்ரூ நெல் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவர் 6 போட்டிகளில் பங்குபற்றுவதற்கு நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் ஐக்கிய கிரிக்கெட்சபை தடை விதித்தது.

அத்துடன் ஆஸ்திரேலிய சுற்றுலாவில் அவர் பெற்ற போட்டி ஊதியமான 17,280 'ராண்ஸ்'களும் (சுமார் 2,24,800 ரூபா) அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

# கிரிக்கெட் பயிற்சியகம் தொடங்குகிறார் அஸாருதீன்

ஹைதராபாத்தில் உலகத்தரம் வாய்ந்த கிரிக்கெட் பயிற்சியகத்தை விரைவில் தொடங்க உள்ளதாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் முகமது அஸாருதீன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டியொன்றில் அவர் இதைத் தெரிவித்தார்.

பயிற்சியகம் தொடங்குவதற்கு யாருடைய அனுமதியையும் பெறத் தேவையில்லை என்றார் அஸாருதன்.

பயிற்சியகம் தொடங்கும் முயற்சியில் அஸாருதீனுடன் ஹைதராபாத் ரஞ்சி அணி வீரர் கன்வல்ஜித்சிங்கும் ஒத்துழைத்து வருகிறார்.

"இளம் வீரர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு நாம் பூரண பயிற்சியளிப்போம். அனுசரணையாளர்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தால் வதிவிடப் பயிற்சியும் அளிக்க முடியும். சர்வதேச கிரிக்கெட் வீரர்கள இப்பயிற்சியகத்திலிருந்து உருவாக்குவோம்" இவ்வாறு 40 வயதான அஸாருதீன் கூறினார்.

கிரிக்கெட் ஊழலில் ஈடுபட்டதாகக் கூறி, அஸாருதீனுக்கு ஆயுள் காலத் தடையை 2000ஆம் ஆண்டு இந்தியக் கிரிக்கெட்சபை விதித்தது.

# டெண்டுல்கருக்கு சத்திரசிகிச்சை!

"இந்தியாவின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு இம்மாத இறுதியில் அமெரிக்காவில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. இடது கையில் ஏற்பட்டுள்ள காயமே இதற்குக் காரணம்."

- இவ்வாறு இந்தியப் பத்திரிகையொன்று நேற்றுமுன்தினம் செய்தி வெளியிட்டது.

கடந்த வருடம் இடம்பெற்ற நியூஸிலாந்து சுற்றுலாவின் போது டெண்டுல்கரின் இடது கையில் வலி ஏற்பட்டது.

ஆனால், கடந்த உலகக்கிண்ணத் தொடரில் 673 ஓட்டங்களைக் குவித்து சுற்றுப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக அவா தெரிவானார்.

அதன்பின்னர் பங்களாதேஷில் நடைபெறும் ஒருநாள் சுற்றுப் போட்டியிலிருந்து அவர் காயம் காரணமாக விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 24ஆம் திகதி தனது 30ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடவுள்ளார் டெண்டுல்கர். இரு நாட்களின் பின் அவர் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார்.

6 வாரகாலம் டெண்டுல்கர் அமெரிக்காவில் தங்கியிருப்பார். அக்காலப் பகுதியில் சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷில் நடைபெறும் ஒருநாள் சுற்றுப் போட்டியின் பின்னர் இந்திய கிரிக்கெட் அணி எதிர்வரும் ஒக்டோபர் மாதமே மீண்டும் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

இதனால், டெண்டுல்கர் சத்திர சிகிச்சையின் பின் குணமடைவதற்குப் போதியகால அவகாசம் உள்ளது.

டெண்டுல்கர் இதுவரை 314 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 12,219 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவற்றுள் 34 சதங்களும் அடங்குகின்றன. டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 8,811 ஓட்டங்களை டெண்டுல்கர் பெற்றுள்ளார்.

(ஒ)

# விளையாட்டு செய்திகள்

வலி.வடக்கு,ஏப்.17

யாழ்மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப்போட்டி யில் இன்று வியாழக்கிழமை பிற்பகல 4.45 மணிககு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் மானிபபாய் கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழகமும் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (ஒ-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஏப்.17

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான மாவட்ட மட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

காலை 8.30 மணி - அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி. (ஒ-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஏப்.17

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தப்படும் பெண்கள் அணிகளுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை யாழ்துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற உள்ளன. இதில் கலந்து கொள்ளும் அணிகளின் விபரம் வருமாறு:-

கோப்பாய் பிரதேச செயலகம் எதிர தெல்லிப்பழை பிரதேச செயலகம்.

சங்கானை பிரதேச செயலகம் எதிர் யாழ்ப்பாண பிரதேச செயலகம்.

வேலணை பிரதேச செயலகம் எதிர் நல்லூர் பிரதேச செயலகம்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு எதிர் உடுவில் பிரதேச செயலகம்.

சாவகச்சேரி பிரதேச செயலகம் எதிர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் எதிர் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு.

கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் இரண்டாம் சுற்றில் இருந்து விளையாடவுள்ளன. (ஒ-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.17

உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி மென்பந்து கிரிக்கெட், சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் முதலான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து மேற்படி சனசமூக நிலையத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டிகள் யாவும் எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (ஒ-12)

## வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட அணியினால் யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே வலைப் பந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பெற்று எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும் என்று பல்கலைக்கழக வலைப் பந்தாட்ட அணித் தலைவி தெரிவித்துள்ளார்.

(ஐ)

## அஸர்பைஜான் அணிக்குத் தடை!

சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு அஸர்பைஜான் நாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் (பீபா) செவ்வாயன்று இத்தடையை விதித்தது.

அஸர்பைஜான் உதைபந்தாட்டச் சங்கத்தில் அந்நாட்டு அரசாங்கம் தலையிடுவதே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுஅறிவித்தல்வரை அஸர்பைஜான் அணி எந்தவொரு சர்வதேசப் போட்டியிலும் பங்குபற்ற முடியாது. இத்துடன் பீபா காங்கிரஸில் நடைபெறும் வாக்கெடுப்புகளிலும் அஸர்பைஜான் கால்பந்தாட்டச் சங்கம் பங்குபற்ற முடியாது என பீபா அறிவித்துள்ளது.


## நன்றி கூறுகின்றோம்

அப்பிளானை, கோப்பாய் மத்தியைச் சேர்ந்த

**திருமதி இரத்தினம் செல்லத்துரை**

(இளைப்பாறிய ஆசிரியை)

அவர்கள் கடந்த 14.04.2003 திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு நேரிலே ஆறுதல்கூறியோருக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

தகவல்
அப்பிளானை,
கோப்பாய் மத்தி (15868)
செ. செல்லத்துரை
*(கணவர் - இளைப்பாறிய ஆசிரியர்).*

## பழைய மாணவர் சங்கம்

யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்

**வருடாந்த ஒன்றுகூடலும்**
**புதிய முகப்பு வாயிற் திறப்பு வைபவமும்**

இடம் :- யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்
காலம்:- 20-04-2003 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- மு.ப. 9.00- புதிய முகப்பு வாயிற் திறப்பு வைபவம்
பி.ப.1.00-பழைய மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடல்

பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்லூரி மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர் (16863) செயலாளர்

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலைக்கு பிரான்ஸிலிருந்து நிதி சேகரித்து அனுப்பிய பழைய மாணவரான சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த

**சபாபதிப்பிள்ளை சற்குணராஜா**

(செட்டி)

அவர்களை இந்நாளில் நினைவு கூருவதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை.* (16874) பாடசாலைச் சமூகம்.

## மரண அறிவித்தல்கள்

### சங்கரப்பிள்ளை பொன்னம்பலம்

(முன்னாள் இளைப்பாறிய இராணுவ அதிகாரி)

மட்டுவில், நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பொன்னம்பலம் அவர்கள் 11.04.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - அப்பாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - செல்லம்மாவின் அன்பு மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சண்முகம், கனகம்மா மற்றும் நாகம்மாவின் அன்புச் சகோதரரும் நல்லம்மா, தங்கமுத்து, செல்லத்துரை, அன்னபூரணம், நடராசா ஆகியோரின் மைத்துனரும் அற்புதராணி (ரஞ்சி-கனடா), வசந்தராணி (பிரான்ஸ்), சௌந்தரராணி, இன்பராணி, பரமேஸ்வரன் (ஹொலண்ட்), செல்வராணி (டென்மார்க்), குகனேஸ்வரன் (ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), புஸ்பராணி (ஜேர்மனி), கலாராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராஜரட்ணம் (கனடா), சிவசங்கரநாதன் (பிரான்ஸ்), தங்கராசா, வைகுந்தவாசன், பிரதீபா, சுதர்சன் (டென்மார்க்), நிர்மலை (ஜேர்மனி), கிரிசாந்தி (பிரான்ஸ்), சிவானந்தராசா (ஜேர்மனி), ரஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யோகமனோகரி (நோர்வே), சுரேஸ் (கனடா), கேதீஸ் (கனடா), சிவரூபி, ஜீவரூபி, மீறன் (பிரான்ஸ்), சங்கீதா (கனடா), சங்கீபன் (பிரான்ஸ்), தனுஜா, தவஜா (யா/சுதுமலை பயிற்சிக் கல்லூரி), அகிலன், நகுலன், கோகிலன், டாகுலன், சுரேகா, சுரேஜன், சோபனா, சோபிகா, சோபிதா (டென்மார்க்), பிரியம் மௌனி, யஸ்மின், ஜான் (ஜேர்மனி), விஜூரன், ரெஜூரன் (பிரான்ஸ்), அனோஜன், அஜிந்தன், சுஜித்தன் (ஜேர்மனி), சிந்துஜா, வினோஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2003) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.* (16875)
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

### கந்தையா கனகசபாபதி

(ஓய்வு பெற்ற நில அளவையாளர் - ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய முன்னாள் தலைவர்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி காலமாகிவிட்டார்.

அன்னார் ஞானலக்ஷ்மியின் அன்புக் கணவரும் உதயகுமாரன் (ஹொலண்ட்), வானதி (ஆங்கில ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு கிழக்கு,*
*ஊரெழு.* (16821)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### திருமதி இரத்தினம் செல்லத்துரை

(இளைப்பாறிய ஆசிரியை )

அப்பிளானை, கோப்பாய் மத்தியைச் சேர்ந்த திருமதி இரத்தினம் செல்லத்துரை அவர்கள் கடந்த 14.04.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் செ.செல்லத்துரையின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி (கனடா), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் நித்தியானந்தன் (கனடா), சுகுமார் (ஆசிரியர், கோப்பாய் ம.வி.) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், முருகேசபிள்ளை, அன்னமுத்து மற்றும் செல்லத்துரை (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்), காலஞ்சென்ற சிவக்கொழுந்து, நவமணி மற்றும் சுப்பிரமணியம் (இளைப்பாறிய மக்கள் வங்கி அதிகாரி), நல்லையா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிருஷா (கனடா), டிதுஷ் (கனடா), நிரோஜ்குமார், தரண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் (15.04.2003) செவ்வாய்க்கிழமை கோப்பாய் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அப்பிளானை,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.* (16846)
தகவல்
செ.செல்லத்துரை
(கணவர்)

பாதசாரிகளுக்கு இடையூறாக

# பட்டாசு கொளுத்திய விஷமிகளை கண்டித்தவருக்கு இரும்புக்கம்பி அடி!

யாழ்ப்பாணம்,ஏப்.17

வீதியில் பட்டாசுகளைக் கொளுத்தி வீசி வழிப்போக்கர்களுக்கு இடையூறு விளைவித்த விஷமிகளைக் கண்டித்தவர் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார்.

புதுவருடத் தினத்தன்று யாழ். அரசடிப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சிவனு பாலகிருஷ்ணன (வயது 53) என்பவரே படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இதே தினத்தில் சங்கானைப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் கந்தசாமி தங்கராசா (வயது45) என்பவர் தலையிலும் இடது கையிலும் காயமடைந்து சங்கானை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிகச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ஒ-15)

## பொதுசன உதவி கொடுப்பனவுகள

வரணி,ஏப்.17


ஏப்ரல் மாதத்துக்கான பொதுசன உதவிக் கொடுப்பனவுகள் கைதடி, கொடிகாமம், சாவகச்சேரி தபாலகங்கள் மற்றும் இவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள உபஅஞ்சலகங்களிலும் தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வருவதாக தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினரின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

(ஒ-170)

NEW SCIENCE COLLEGE கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இணைந்த கணிதம்
A/L 2005
திரிகோணகணிதம்
ஆசிரியர்: ப.செந்தில்நாதன் B.Sc.
Mon., Wed., Fri., - 6.45 - 7.45 a.m. (ப.நே) (16876)

## நன்றி நவில்லும் புத்தாண்டு வாழ்த்தும்



கொற்றாவத்தை செட்டிதறை சித்தி விநாயகர் ஆலயத்தின் இந்து கலாசார கல்யாண மண்டபத்தை அமைப்பதற்கு பெருந்தொகையான நிதியையும், ஆலயத்தின் தேவைக்கென முச்சக்கர வண்டியையும் வழங்கி

பேருதவி புரிந்த

இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு

**தி.மகேஸ்வரன்**

அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கரணவாய் வடக்கு,
கரவெட்டி.
(16869)

செட்டிதறை சித்தி விநாயகர்
ஆலய பரிபாலனசபை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாவாந்துறை கலைவாணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் ஆரம்பிக்கவிருக்கும கலைவாணி இந்து சமயப் பேரவை முன்பள்ளி கட்டடப் புனரமைப்பிற்கு,

இந்து சமய கலாசார அமைச்சர் கௌரவ

**திரு. தி.மகேஸ்வரன்**

அவர்களால் ரூபா பத்து லட்சம் நிதி ஒதுக்கீட்டிலிருந்து முதற் கட்டமாக ரூபா மூன்று லட்சம் தந்து உதவியமைக்காக அவரை மனதார பாராட்டுவதோடு, அதற்கு உதவிய அனைத்து பெரியோர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடற்கரை வீதி,
நாவாந்துறை.
(16873)

கலைவாணி கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளும்
பொது மக்களும்

## நீங்கா நினைவில் முதலாம் ஆண்டு

தோற்றம்
16 - 08 - 1940



மறைவு
28 - 04 - 2002

**அமரர் வீரகத்தி திரவியம்**

ஆண்டொன்று ஆகிவிட்டதே!
நம்பத்தான் முடியவில்லை
கண்ணீரும் காயவில்லையே
காலந்தான் கடந்துவிட்டதே!

82/9, 3ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.
(16870)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,எப்.17

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய மகோற்சவம் இன்று வியாழக்கிழமை பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 9.00 மணிக்குத் தீர்த்தோற்வமும் இடம்பெறும். (ஓ)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.17

தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரமபமாகிறது.

எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 25 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு தேர்த்திருவிழாவும், 26 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ)

## 15 வருடத்திற்கு மேலாக புனரமைக்கப்படாத ஆனந்தன்வடலி வீதி

கொழும்புத்துறை,ஏப்.17

அரியாலை ஆனந்தன்வடலி வீதி கடந்த 15 வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால், இவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆனந்தன்வடலிப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளதால் மேற்படி வீதி புனரமைக்கப்படுவது அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-30)

## ஒரு தொகுதி மருந்துகள் வந்து சேர்ந்தன!

சண்டிலிப்பாய்,ஏப்.17

யாழ்.சுகாதாரத்திணைக்களத்திற்கு இவ்வருட முதலாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகளில் ஒரு தொகுதி கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளது. இங்கிருந்து சென்ற இரு திணைக்கள லொறிகள் மூலம் இந்த மருந்துகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக யாழ்.சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கும் மற்றும் அரசினர் மத்திய மருந்தகங்களுக்கும் இந்த மருந்து வகைகள் பங்கீடு செய்யப்பட்டு விரைவில் விநியோகம் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

(ஒ-135)

கூலி ஆள்கள் தேவை

யானைச் சோடா
ஏற்றி இறக்குவதற்கு
ஆள்கள் உடன் தேவை.

தொடர்பு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம் (16862)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், ரம்பா, நம்பியார் நடித்த
என்றென்றும் காதல்
காட்சிகள் தினசரி: 11.00, 2.00, 7.00 (பி.நே.)

ராஜா யாழ்ப்பாணம்
அர்ஜுன் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30இற்கும்

கார்த்திக், லைலா, மாளவிகா, மனோரமா நடித்த
ரோஜாவனம்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பி.நே.)
T.P.: 070 212223

விஜயகாந்த், சிம்ரன் நடித்த
ரமணா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே.)
JURASSIC PARK - 3

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் கந்தையா கனகசபாபதி**

(நில அளவையாளர், ஊரெழு)

எமது நிர்வாகசபை உறுப்பினரான கந்தையா கனகசபாபதி அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது சங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றது.

உத்தரவு பெற்ற
நில அளவையாளர் சங்கம்
வட பகுதி.

(சி-27455)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை சிறிதரன்

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னத்துரை சிறிதரன் நேற்று (16.04.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் தனலஷ்சுமி தம்பதிகளின் மகனும் விஜயகுமாரியின் அன்புக் கணவரும் கம்சிகா, மதிஸ், கயந்தினி, கோகிலமதி, வித்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும் பகிதரன் (கனடா), சிறிரஞ்சினி (லண்டன்), ஏகாதரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வசந்தகுமார், மேனகா ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2003) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கைதடி நுணாவில் குச்சப்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
(16882)

தகவல்:
விஜயகுமாரி
(மனைவி).

### பொன்னையா கந்தையா

புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ் திருநெல்வேலி, பலாலி வீதி இல. 525ஐ வதிவிடமாகக் கொண்ட பொன்னையா கந்தையா நேற்று (16.04.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - இராசம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா நாயகம் ஆகியோரின் மருமகனும் விசாலாட்சின் அன்புக் கணவரும் தவச்செல்வன் (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்), கணேசராசா (சுவிஸ்) ஆகியோரின் தந்தையாரும் பவானி (சுவிஸ்), காலஞ்சென்ற பரமேஸ்வரன் (சுவிஸ்), சுகந்தி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான செங்கமலம், விசாலாட்சி, நல்லம்மா, நடராசா, யோகம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல 525, பலாலி வீதி,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.
(16881)

தகவல்
க.விசாலாட்சி
(மனைவி).

### திருமதி பொன்னையா பொன்னம்மா

*(இளையாச்சி)*

அம்பனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பொன்னையா பொன்னம்மா பிரான்ஸில் 13.04.2003 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மாரிமுத்து தம்பதிகளின் மகளும் திருமதி தங்கபொன்னு, பொன்னுத்துரை (லண்டன்), காலஞ்சென்றவர்களான திருமதி சொர்ணம், அப்புத்துரை, பொன்னுராஜா ஆகியோரின் சகோதரியும் உருக்குமணிதேவி, ராஜகாந்தன், ஜெயக்கொடிதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சத்தியபாமா மற்றும் வளர்மதி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் இரட்னேஸ்வரன், சுந்தரமூர்த்தி, கனகராணி, புவிந்திரன், ஞானசேகரம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23, குளப்பிட்டி லேன்,
கொக்குவில்.
(16878)

தகவல்:
பொ.சமரக்கொடி
(மருமகன்) (பிரான்ஸ்)

### திருமதி பொன்னுத்துரை தங்கம்மா

செட்டி குறிச்சி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் இல. 90, மணிக்கூட்டு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை தங்கம்மா நேற்று (16.04.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் லோகநாயகி, தயாபரன் (தபாலகம், பண்டத்தரிப்பு), செல்வநதி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), திருமுருகன், ஞானகுருவேல் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.04.2003 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இல. 90, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(16880)

தகவல்
பொ.தயாபரன்
(மகன்)

### திருமதி கதிர்காமத்தம்பி தங்கம்மா

மாதனை, தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் தற்போது சேர்ச் லேன், சங்கானையில் வசித்து வந்தவருமான திருமதி கதிர்காமத்தம்பி தங்கம்மா அவர்கள் நேற்று (16.04.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி (காசாளர், ப.நோ.கூ.ச. தெல்லிப்பழை)யின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளைய தம்பி - விசாலாட்சிப்பிள்ளை தம்பதிகளின் மகளும் கலாமதி, சாந்திமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சண்முகலிங்கம், நடராஜா, மாணிக்கவாசகர், கனகம்மா, பஞ்சலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் கிருபாலசிங்கம், செல்வச்சந்திரன் (சவூதி அரேபியா) ஆகியோரின் மாமியாரும் விஜயலக்சுமி, கீதாலெட்சுமி, நாகம்மா, செல்வரட்ணம் (பிரான்ஸ்), புனிதவதி ஆகியோரின் மைத்துனியும் துஜுசா, திலீபன், ரஜீவன், திலக்ஷன், திவ்வியா, விமல்ராஜ், சதீஸ்ராஜ், சந்திரராஜ், மோகன்ராஜ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2003) வியாழக்கிழமை தேவாலய வீதி, சங்கானையில் உள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேர்ச் லேன்,
சங்கானை.
(16879)

தகவல:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கிளிநொச்சி பன்னங்கண்டியில்

# 4 ஏக்கர் நெற்சூடு தீயில் எரிந்து நாசம்

### வைக்கோலுக்கு வைத்த தீ நெல்லையும் எரித்தது

கிளிநொச்சி,ஏப்.17

கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில் "இரசையாகமம்" எனக் குறிப்பிடப்படும் வயலில் 4ஏக்கர் நெற்சூடு தீயில் எரிந்து முற்றாக நாசமடைந்துள்ளது.

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

இந்த வயலுக்கு அருகிலுள்ள வயலில் அடுக்கப்பட்டிருந்த வைக்கோலுக்குத் தீ வைக்கப்பட்டிருந்ததாகவும் -

அந்தத் தீ கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் பரவி பக்கத்து வயலில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெற்சூட்டிலும் பற்றிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தினால் நெற் சூட்டின் உரிமையாளருக்கு சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-4)

## உலகை பீதியில் ஆழ்த்தும்

# 'சார்ஸ்' நோய்க் கிருமி இனங்காணப்பட்டது!

'சார்ஸ்' நோயை ஏற்படுத்தும் வைரஸ் கிருமி சரியாக இனங்காணப்பட்டிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்திருக்கின்றது.

இது சாதாரண தடிமனை உருவாக்குகின்ற வைரஸ் கிருமியிலிருந்து சற்றே மாறுபட்ட ஒரு புதுவகையான கிருமி என்று உலக சுகாதார நிறுவனத்தின் அதிகாரியான டாக்டர் டேவிற் ஹைமன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கிருமி மனிதர்களின் சிறுநீர், மலம், கண்ணீர், மூக்குநீர், எச்சில் போன்ற கழிவுகளில் இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கிருமியை இனங்கண்டிருப்பது இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்களை இலகுவாக அடையாளம் காணபதற்கும் இக்கிருமி எப்படிப் பரவுகின்றது என்பதை விரிவாக அறிந்து கொளவதற்கும் உதவியாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## வங்கியை கொள்ளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்கிக்குள் ஆயுதங்களுடன் நுழைந்த மூன்று கொள்ளையர்கள் முகாமையாளரை மிரட்டி பணத்தை கொள்ளையிட்டுக்கொண்டு தப்பிச் செல்ல எத்தனித்தனர். அப்போது பொலீஸாருக்கும் கொள்ளையர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. மோதலில் கொள்ளைக் கோஷ்டியின் தலைவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

அவர் மாத்தறை சிறைச்சாலையில் கடமையாற்றும் அதிகாரியான லசித் சந்தன முத்துகுமாரண எனப் பின்னர் அடையாளம் காணப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

இவரிடமிருந்து ரி.56 ரகத் துப்பாக்கி, கைத்துப்பாக்கி மற்றும் இரண்டு கிரனேட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் தப்பிச் சென்ற மற்றைய இருவரைத் தேடிப் பொலீஸார் வலை விரித்துள்ளனர்.

காயங்களுடன் தப்பிச்செல்ல எத்தனித்த கொள்ளையர்களின் தலைவன் எனக் கருதப்படும் சிறை அதிகாரி கிணறு ஒன்றுக்குள் தவறி விழுந்ததாலேயே கொல்லப்பட்டார் என்றும் கூறப்பட்டது. மூன்றுநாள் விடுமுறையில் வந்திருந்தபோதே அவர் இந்த கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் எனவும் மற்றும் பல குற்றச்செயல்களுடன் இவருக்குத் தொடர்பு இருக்கலாம் எனவும் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஈராக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியவர்.

கைது செய்யப்பட்ட அபு அப்பாஸை உடன் விடுதலை செய்ய வேண்டுமெனவும், அவரைக் கைது செய்யும் அதிகாரம் அமெரிக்காவுககு இல்லையெனவும் பலஸ்தீன அதிகார சபை அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது.

1995 செப்ரெம்பர் 28இல் செய்து கொள்ளப்பட்ட இஸ்ரேலிய - பலஸ்தீன இடைக்கால ஒப்பந்தத்தின் பின் முன்னைய குற்றச்சாட்டுக்களுக்காக பலஸ்தீனத் தலைவர்களைக் கைது செய்யமுடியாது எனவும், பலஸ்தீன அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. *(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)* (ஐ)

## 'டிரக்' மோதி பெண் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

இராணுவத்தினரின் 'டிரக்' மோதியதால் இருகால்களிலும் படுகாயமடைந்த பெண்ணொருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்.

கொடிகாமம் பஸ் நிலையத்துககு அருகில் நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மிருசுவில் வடக்கைச் சேர்ந்த கே.ரஞ்சினி (வயது 29) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

நகைக்கடை ஒன்றுக்கு சென்றுவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த இவரை எதிரே வந்த இராணுவத்தினரின் டிரக் ஒன்று மோதியதாகக் கூறப்பட்டது. (ஐ-4)

## அன்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு மாலையில் நினைவுரைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை இதில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-8-88)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் இடையே பிரிவினையை ஏற்படுத்த விரும்பும் - அமைதிக்கு எதிராக - சில குழுக்கள் அங்கு தற்போது தீவிரமாகச் செயற்படத் தொடங்கியுள்ளன.

"சமாதான முயற்சிகளைக் குழப்ப முயலும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இந்தக் குழுவைத் தமிழ், முஸ்லிம் மக்கள் அடையாளம் காணவேண்டும். அத்தோடு, பொறுமை காத்து, நிரந்தரத் தீர்வை எட்டுவதற்காக உழைக்கவேண்டும்.

"மேற்படி இரண்டு இளைஞர்கள் கடத்தப்பட்டனர் என்று கூறப்படுவதற்கும் எமக்கும் எந்தத் தொடர்புமே இல்லை. கடத்தப்பட்ட இளைஞர்களில் ஒருவரின் தாயார் தற்கொலை செய்துகொண்டதாக அறிகிறோம். அந்தத் தாயின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறோம்" - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற ஹெலிதாங்கி யுத்தக் கப்பல் ஒன்றை கொள்வனவு செய்திருந்தது. ஆனால், அதில் இறங்கிச் செல்வதற்கான ஹெலியை இன்னமும் இலங்கைக் கடற்படை கொள்வனவு செய்யவில்லை.

இந்த நிலையில் அமெரிக்கா இந்த நவீனரக யுத்தக் கப்பலை இலங்கைக்கு வழங்க முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மேரியன் மாநிலத்தில் உள்ள மோல்ட்மே கடற்படைத் தளத்தில் 'கரேஜஸ்' கப்பல் மீளமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. (ஐ)

## மட்டக்களப்பு வலையிறவில்

# பாடசாலைக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்ட வந்தோர் துரத்தப்பட்டனர்

### விமானப் படையினர் நடவடிக்கை

மட்டக்களப்பு,ஏப்.17

மட்டக்களப்பு வலையிறவு மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிய கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வைத் திடீரென அங்கு சென்ற விமானப்படையினர் தடுத்து நிறுத்தினர். அடிக்கல் நாட்டச் சென்றவர்களை ஐந்து நிமிடத்துக்குள் அங்கிருந்து வெளியேறுமாறு அவர்கள் பணித்தனர்.

இந்தப் பாடசாலையில் இடப்பற்றாக்குறை காரணமாகப் பாடசாலை கட்டடத்தை மேலும் விஸ்தரிப்பதற்காகப் புதிய கட்டடம் ஒன்றை அமைகக்த் தீர்மானிக்கப்பட்டது. இக்கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது.

அப்போது அந்த இடத்துக்குத் திடீரென வந்த விமானப் படை அதிகாரி ஒருவர் அடிக்கல் நாட்டும் வைபவத்துக்காக வந்திருந்த பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் மற்றும் மட்டக்களப்பு வலயக் கல்வி அதிகாரி பவளகாந்தன் ஆகியோரை அங்கிருந்து ஐந்து நிமிடத்துக்குள் வெளியேறுமாறு உத்தரவிட்டார்.

'நொராட்' நிறுவனம் இந்தப் பாடசாலைக் கட்டட அபிவிருத்தித் திட்டத்துக்காக ஒரு கோடி 35 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

உத்தேச விமான நிலைய விஸ்தரிப்புப் பிரதேசத்தில் இந்தப் பாடசாலை தொடர்ந்து இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

விமானப் படையினர் இவ்வாறு நடந்து கொள்வது தொடர்பாக மட்டக்களப்பு அரச அதிபர் மோனகுருசாமி, இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பாக இன்று காலை மட்டக்களப்பு வலயக் கல்விப பணிமனையிலும், செயலகத்திலும் விசேட கூட்டங்கள் இடம்பெறும் எனத் தெரியவருகிறது. (ஐ)

## பிரதமரின் தகுந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார் எனவும் கூறப்படுகிறது.

இதனால் எழுந்த பதற்றத்தைத் தணிப்பதற்காக அமைச்சர் ஹக்கீம், அஸ்வர், காதர் ஆகியோர் உட்பட முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐ.தே.கட்சி எம்.பிக்கள், பிரமுகர்கள் நேற்று முன்தினம் மூதூர் சென்றிருந்தனர். அங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மு.கா., ஐ.தே.கட்சி எம்.பிக்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் இரு தரப்பினரிடையேயும் பெரும் மோதலை ஏற்படுத்தியது.

அமைச்சர் ஹக்கீமும் ஏனைய முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களும் அவமதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்து, இவ்விடயம் குறித்து பிரதமர் நேரடியாகத் தலையிட்டு, மூதூருக்கு வந்து, பிரச்சினையைத் தீர்த்துவைக்கும்வரை அமைச்சர் ஹக்கீம் மூதூரை விட்டு நகரக்கூடாது என்று முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் வற்புறுத்தினர். அதற்கு இணங்கிய அமைச்சர் ஹக்கீம் மூதூரில் தங்கிவிட்டார்.

இப்பிரச்சினை குறித்து நேற்றுப் பகல் அமைச்சர் ஹக்கீம் பிரதமர் ரணிலுடன் தொலைபேசியில் உரையாடியதாகத் தெரிகின்றது.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் தமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சாடல்கள் குறித்து உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர், அமைச்சர் ஹக்கீமிடம் அப்போது உறுதி கூறினார் என தெரிவிக்கப்பட்டது.

இவ்விவகாரம் குறித்து தம்முடன் பேசுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்றக் குழுவொன்றை கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு பிரதமர் அப்போது அமைச்சர் ஹக்கீமிடம் கேட்டுக்கொண்டார் எனவும் கூறப்பட்டது.

இந்நிலையில் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீடமும், நாடாளுமன்றக் குழுவும் நேற்றுமாலை மூதூரில் அமைச்சர் ஹக்கீம் தலைமையில் கூடி, தற்போதைய நிலைமை குறித்து ஆராய்ந்தன.

இக்கூட்டங்கள் குறித்து நேற்று இரவு 10.30 மணியளவில் அமைச்சர் ஹக்கீம் உதயனுக்குத் தகவல் வெளியிட்டார்.

அவர் கூறியதாவது:-

"இவ்விவகாரம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தகுந்த பதில் தரும்வரை நான் கொழும்பு திரும்பத்தேவையில்லை என்று கட்சியின் அதியுயர்பீடமும், நாடாளுமன்றக் குழுவும் தீர்மானித்துள்ளன.

"மூதூரிலும் வடக்கு, கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் கண்டிபோன்ற எனது பிரதேசத்திலும் கட்சி மற்றும் அது தொடர்பான விடயங்களை நான் சென்று கவனிப்பேன். எனினும், பிரச்சினைக்குத் தீர்வு வரும்வரை கொழும்பு திரும்பவேண்டிய அவசியமில்லை.

"இவ்விடயம் குறித்து எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கொழும்பு சென்று அங்கு பிரதமரைச் சந்தித்துப் பேசவேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட யோசனையையும் அதியுயர் அரசியல்பீடமும், நாடாளுமன்றக் குழுவும் நிராகரித்துவிட்டன. தலைவர் இல்லாமல் நாடாளுமன்றக் குழு பிரதமருடன் என்னபேசவேண்டியிருக்கின்றது என்றும் இரு குழுக்களிலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

"தற்போது நாட்டில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கவும் நேற்று இரு குழுக்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. சமாதானப் பேச்சுக்களின் முஸ்லிம் தரப்பின் அந்தஸ்து நிலை உயர்த்தப்படவேண்டியதன் அவசியம் குறித்தும் இரு குழுக்களின் கூட்டத்திலும் வலியுறுத்தப்பட்டது."

- இவ்வாறு அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார். நேற்றிரவு 11 மணியளவில் கட்சியின் அதியுயர் பீடம் மீண்டும் கூடி தற்போதைய சர்ச்சை நிலை குறித்துத் தொடர்ந்தும் ஆராயவிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)


BITSMANS கல்வி நிறுவனம், மானிப்பாய்.

O/L DAY CLASS

எமது வழமையான "SUPER GRADE" ஆசிரியர்குழு

ஆரம்பம்: 18.04.2003 வெள்ளி 8.00 a.m.


விண்ணப்பங்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்.

விஞ்ஞானம்: இரா.செல்வவடிவேல்
கணிதம்: இரா.அருட்செல்வம், சிவா
தமிழ்: N. பாலா, தர்மா
சமூகக்கல்வியும் வரலாறும் } கிரிதரன், N.ராஜன்
ஆங்கிலம்: M.A.HARI
வர்த்தகமும் கணக்கியலும் } N.ராஜன்
இந்து சமயம்: சங்கர்

(16832)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராகப் பதவியேற்றிருக்கும்

பேராசிரியர் சு.மோகனதாஸ்

அவர்களை யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறையின் கல்விக்கழகமானது வாழ்த்துக்கள் பலகூறி வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றது.

துணைவேந்தர் அவர்களின் பணி
மேன்மேலும் சிறந்து விளங்க
வாழ்த்துவதோடு
அவர் நீடூழிகாலம் வாழவேண்டும் என
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விக்கழகம்,
கல்வியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(16851)



விக்னா கல்வி நிறுவனம்

பிரிவு 3

O/L DAY CLASS

(8.30 - 2.00)

ஆரம்பம்: 21.04.2003

★பிரிவு 2 இற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.
★பிரிவு 4 மிக விரைவில்.
★இவ்வருடமும் 6 பிரிவு மட்டுமே.

(16845)



எமது புதிய வீடியோ.CD வெளியீடு
சிலம்பரசனின்
தம்
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (16877)



கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
A/L 2005
பொருளியல்
ஆரம்பம்: 18.04.2003 மாலை 4 மணி
யாழ்நகர் முன்னிலை ஆசிரியர்
வரதராஜன்
✳ அனுமதிகள் முன்கூட்டியே பெறவேண்டும்.
✳ தனிப்பாடம் எடுக்கலாம்.
(C/27438)



LIONAIR

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்

பாதுகாப்பான - சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ். நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :
லயன்எயார் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992

(C/27784)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மக்களுடன் ஒன்றித்து தமிழ்த் தேசியத்தை கட்டிக்காத்த பெருமை உதயனையே சாரும்

## கிரிக்கெட் கொண்டாட்டம் பரிசளிப்பு நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம்,ஏப்.17

மக்களுடன் ஒன்றித்து சேவையாற்றி தமிழ்த் தேசியத்தைக் கட்டிக்காத்த பெருமை 'உதயன்' பத்திரிகையையே சாரும்.

- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் யாழ். மாநகர ஆணையாளர் சி.வி. கே.சிவஞானம் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்' நடத்திய கிரிக்கெட் கொண்டாட்டம் போட்டிகளில் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசில் வழங்கும் வைபவம் கடந்த புத்தாண்டு தினத்தன்று மாலை உதயன் - சஞ்சீவி பணிமனையில் இடம்பெற்றது. 'உதயன்' விளம்பர முகாமையாளரும் முன்னாள் அதிபருமான சுடர் இ.மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ்.கல்வி வலய உடற் கல்விப் பணிப்பாளர் ரி.அருணகிரிராஜா வும் சிறப்புரையாற்றினார். அவர் கூறியதாவது:-

'உதயன்' பத்திரிகை சில இடங்களில் சறுக்கிவிடுவதைப் பார்க்கும் போது மிகப் பரிதாபமாக இருக்கும். யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் சகல விளையாட்டு மற்றும் கல்வி சார் நிகழ்வுகளுக்கு உதயனே அனுசரணை வழங்கி வந்தது. கடந்தகால அரசியல் சூழ்நிலைகளின்போது யாழ்.குடாநாட்டிலிருந்து புறநிலைக் கல்விச் செயற்பாடுகளுக்கென மாணவர்கள் தென்பகுதிக்குச் செல்லமுடியாத நிலை இருந்தது. அந்தவேளையிலும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தென்பகுதிக்குச் சென்று 'மினி ஒலிம்பிக்' போன்ற போட்டிகளில் பங்குபற்ற வைத்த பெருமை உதயனைச் சாரும்.

அண்மைய நாள்களில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நடந்து கொண்ட விதத்தைப் பார்க்கும்போது உதயனைப் பார்த்து பரிதாபப்படவே என்னால் முடிந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் விளையாட்டுத்துறை சார்ந்த - தகுதியானவர்களுக்கு - முன்னுரிமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவேண்டும் என்ற அழுத்தம் எமது கல்விச் சமூகத்திடமிருந்து உருவாகவேண்டும்.

விளையாட்டுத்துறையுடன் நெருங்கிய தொடர்பைக்கொண்ட 'உதயன்' விளையாட்டு, கல்வி போன்ற துறைகளில் தனது சேவையினை தொடர்ந்து வழங்கவேண்டும். அவ்வப்போது எதிர் கொள்ளப்படும் 'பிசகுகளை' பொருட்படுத்தாது தனது ஆர்வலர்களை 'உதயன்' திருப்திப்படுத்தவேண்டும்.

- இவ்வாறு அருணகிரிராஜா தெரிவித்தார்.

மாபெரும் இறுதிப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான முதல் மூன்று பரிசுகளையும் முறையே மைக்ரோ பி.சி. சிஸ்டம்ஸ், சிங்கர் நிறுவனம், ஷார்ப் நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் வழங்கினர். மற்றும் பரிசுகளை எக்ஸ்போ ஏவியேஷன் லிமிட்டட், லுமாலா, ஏஷியன் கொம்பியூட்டர்ஸ் மற்றும் அருண்ஸ் நிறுவனங்களின் பிரதிநிதிகள் வழங்கினர்.

இறுதியாக கவிதாலயா இசையமைப்புடன் 'உதயன்' கலைஞர்கள் வழங்கிய இசை நிகழ்ச்சி இடம் பெற்றது.

(ஜ-9)

# ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மேதினத்தில் அணிதிரள்வோம்!

## புதிய ஜனநாயகக்கட்சி அறைகூவல்

யாழ்ப்பாணம்,ஏப்.17

உலகத் தொழிலாளர்களின் புரட்சிகரப் போராட்ட நாளான மேதினத்தில் பேரினவாத ஒடுக்குமுறை, பெருமுதலாளித்துவ ஆட்சியின் தொழிலாளர் விரோத மக்கள் விரோத நடவடிக்கைகள், உலக மயமாதல் - தனியார்மயம், ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு என்பவற்றுக்கு கடும் கண்டனத்தையும எதிர்ப்பையும் தெரிவிக்க மக்களை அணிதிரளுமாறு புதிய ஜனநாயக கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் மத்திய குழு சார்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஒரு வருடகால யுத்த நிறுத்தமும் பேச்சு முயற்சிகளும் வடக்கு - கிழக்கு உட்பட நாடு முழுவதற்கும் நிம்மதியைத் தந்துள்ள போதிலும் நியாயமான அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் பின்னடிக்கப்பட்டே வருகின்றன. பேரினவாத யுத்த வெறியர்களும், அயல் அந்நிய சக்திகளும் பேச்சைக் குழப்ப இடமளிக்காத வகையில் அரசியல் தீர்வுக்கான பேச்சை தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும் என்பதை எமது கட்சி வலியுறுத்துகின்றது.

அதேவேளை, இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசு சமாதானப் பேச்சை முன்னுக்குக்காட்டி அதன் மறைவில் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் எதிராக எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளை எமது கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. ஏகாதிபத்திய உலகமயமாக்கல் திட்டத்தின் கீழ் தாராளமயம், தனியார்மயம் என்பனவற்றின் ஊடாக நாட்டின் பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டுத் துறைகள் அனைத்தும் படுபயங்கர நாசங்களை நோக்கி இழுத்துச் செலப்படும் அபாயங்களை மக்கள் அடையாளம் கண்டு எதிர்த்து நிற்க வேண்டியது அவசியமாகின்றது. உலக மக்களதும் நாடுகளதும் கடுமையான எதிர்ப்பையும் கண்டனத்தையும் மீறி அமெரிக்கா தலைமையில் ஈராக் மீது நடத்தப்பட்ட அப்பட்டமான ஆக்கிரமிப்பு வன்மையாக எதிர்க்கப்பட வேண்டியதாகும் இன்றைய ஈராக் மீதான ஆக்கிரமிப்பு நாளை இலங்கையிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கிலும் நிகழ்த்தப்படலாம்.

ஆதலால், எதிர்வரும் மேதினத்தில் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரும் செங்கொடியின் கீழ் அணி திரண்டு சகல ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் உறுதிமிக்க எதிர்ப்புக் குரலை முன்வைக்க முன்வரவேண்டும் என்ற அறைகூவலைப் புதிய ஜனநாயக கட்சி விடுக்கின்றது - என்றுள்ளது.

(ஓ)

### கலைஞர்கள் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ்.திருமறைக் கலாமன்றம் அண்மையில் மேடையேற்றிய 'பலிக்களம்' திருப்பாடுகளின் காட்சி நிகழ்வில் அரங்கத்திலும், அரங்கப் பின்னணியிலும் பங்கேற்ற கலைஞர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

அனைத்து கலைஞர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-8)

# ஆங்கிலமொழி மூல கற்பித்தலுக்கு குடாநாட்டில் முதல் பாடசாலை

பிரிட்டிஷ் வர்த்தகக் கல்லூரி தனது கல்விச் செயற்பாட்டை விரிவாக்கும் வகையில் கடந்த மார்ச் மாதம் தனது முதலாவது வளாகமாகிய யாழ்நகர வளாகத்தை 140, கோயில் வீதியில் ஆரம்பித்தது. மாணவர்களுடைய நன்மை கருதி இக்கல்லூரி யாழ் கச்சேரி வளாகத்தை 174, கண்டி வீதியில் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த யாழ்.கச்சேரி வளாகமானது சிறப்பாக 2+ வயது தொடக்கம் 5+வயது வரையிலான சிறுவர்களுக்காகவும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்காகவும் ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்கென ஆரம்பிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்படவுள்ள இவ்வளாகமானது சர்வதேசத் தரம் வாய்ந்த வளாகமாக விளங்க இருப்பதோடு, வெளிநாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட நவீன கற்பித்தல் உபகரணங்களின் உதவியுடன் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வளாகத்தில் வழங்கப்படும் பயிற்சி நெறியின் சிறப்பம்சம் யாதெனில், சிறுவர்களுக்கு ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படுவதுடன் கட்டாய பாடமாகத் தமிழும் கற்பிக்கப்படவுள்ளமையாகும். மேலும் டாக்டர் மரியாவின் சிறுவர் இயற்பாங்கு (montessori)கற்பித்தல் முறையுடன் கனேடிய ஆரம்பக் கல்வி முறையும் பின்பற்றப்படவிருப்பது குறிப்பிடத்தக்கதாகும் அத்துடன் பிரிட்டிஷ் வர்த்தகக் கல்லூரியில் மேற்குறிப்பிடப்பட்ட கற்பித்தல் முறைகளில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் குழாத்தினால் கற்பிக்கப்படவிருப்பது சிறப்பம்சமாகும்.

விளையாட்டு பருவம் (Play group) பிரிவில் 2+-3+ வயதுடைய மாணவர்களுக்கு காலை 8.30மணி முதல் பிற்பகல் 11.30மணி வரையிலும் -

**தொழில் வளம்**


இயற்பாங்கு கற்றல் (montessori School) பிரிவில் 3+-4- வயதுள்ளவாகளுக்கு காலை 8.30மணி முதல் பிற்பகல் 12.30மணி வரையிலும்-

முன்பள்ளி(Pre School) பிரிவில் 4+-5+ வயதுள்ளோருக்கு காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 1.30மணி வரையிலும் - கற்பிக்கப்படவுள்ளன.


மேற்குறிப்பிட்ட பாட நெறிகள் இவ்வளாகத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை நடைபெறவுள்ளன. மேலும் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய தூர இடங்களிலிருந்து கற்கவரும் சிறுவர்களுக்காக இவ் வகுப்புகள் சனிக்கிழமைகளில் காலை 9.00மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை நடைபெறவுள்ளன. இப் பிரிவைச் சார்ந்த சிறுவர்களுக்கு திங்கள் முதல் வெள்ளி வரை நடத்தப்படும் பாடநெறிகளை ஒரே நாளில கற்பிப்பதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களை விட பாடசாலை செல்லும் மாணவர்களின் நன்மை கருதி ஆங்கில மொழி மூலம் அங்கில வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்வளாகத்தில் இடம்பெறும் இக்கற்பித்தல் முறையின் சிறப்பம்சம் சிறுவர்களுக்கு ஆங்கில அறிவை மேம்படுத்துவதாகும்.

யாழ்.கச்சேரி வளாகமானது யாழ். செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ளதோடு, வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களுக்கு வசதியாக பஸ்தரிப்பு நிலையங்களுக்கு அருகிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



புதுவருடத் தினத்தன்று இடம்பெற்ற உதயன் கிரிக்கெட் கொண்டாட்டம் பரிசளிப்பு விழாவில் உதயன் விளம்பர முகாமையாளர் சுடர் இ.மகேந்திரன் தலைமையுரை ஆற்றுகின்றார்.



பரிசளிப்பு விழாவில் உதயன் பிரதம ஆசிரியர், சி.என்.வித்தியாதரன் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு பரிசில் வழங்குகின்றார். அருகில் செய்தி ஆசிரியர் க.குமாரதாஸனும் காணப்படுகின்றார்.



பரிசளிப்பு விழாவில் ஏசியன் கொம்பியூட்டர் நிறுவன யாழ்ப்பாண இணைப்பங்குதாரர் ரீ.சுடரோன், வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார்.



பரிசளிப்பு விழாவில் இறுதியில் இடம்பெற்ற 'கவிதாலயா' இசையமைப்பினருடன் 'உதயன்' கலைஞர்கள் வழங்கிய இசை நிகழ்ச்சியில் கிரிக்கெட் கொண்டாட்டத்தின் முதலாம் பரிசை வென்ற சிறுவன் எஸ்.நிஷாந்தனும், அவரது சகோதரனும் புரட்சிக்கானம் ஒன்றை இசைக்கின்றனர்.



பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டபிரமுகர்களில் ஒரு பகுதியினர்.

## போரற்ற இன்றைய சூழ்நிலையிலும்

# யுத்த காலத் தோரணைகள் படையினரிடம் மாறவேயில்லை!

## திருமலை விழாவில் சட்டத்தரணி உரை

யாழ்ப்பாணம்,ஏப்.17

இன்றைய யுத்தமற்ற சூழ்நிலையிலும் அரச படையினரின் யுத்த கால தோரணை, மனோநிலை இன்னும் மாற்றமடையவில்லை. இவை சமாதானத்திற்கு உகந்த செயலாகத் தெரியவில்லை.

இவ்வாறு விசனம் தெரிவித்தார். சட்டத்தரணி கா.சிவபாலன் திருகோணமலை, உவர்மலை விவேகானந்தக் கல்லூரியில் இடம்பெற்ற 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' விழாவின் இறுதி நாள் நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சட்டத்தரணி அங்கு மேலும் கூறியதாவது:-

கலையில் ஈடுபாடில்லாதவன் முழு மனிதனாக இருக்கமுடியாது; மானுட நேயனாகத் திகழ முடியாது. ஒரு சமூகத்தை அழிப்பதனால் அவர்களின மொழி, கலை, பண்பாட்டுக் கூறுகளை எதிரி அழிப்பதை நாம் அறிவோம். இன்று பல ஊடகங்கள் கூட அதனைச் செய்து கொண்டிருக்கின்றன.

தமிழ்மொழி, ஆட்சி மொழியாக அரசமைப்பின் 1985 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தின மூலம் ஆக்கப்பட்டுள்ளது. ஆயினும் வடக்கு - கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணப் பொலீஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடுகளைப் பதிவு செய்துகொள்ள முடிவதில்லை. குற்றப் பத்திரிகை, குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் யாவும் சிங்களத்திலேயே பதிவு செய்யப்படுகின்றன.

ரூபவாஹினி மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சேவைகள் தமிழ் மக்களுக்குப் போதுமானதாக இல்லை. இவை எமக்கான ஒரு தேசத்தின் தேவையைச் சொல்லிநிற்கின்றன.

எமக்கான உரிமைகள் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டு வந்துள்ளன. திருகோணமலையும் மட்டக்களப்பும் அல்லை - கந்தளாய் போன்ற அரச குடியேற்றத் திட்டங்கள் மூலம் பிரிக்கப்பட்டன. பதவியா - மணலாறு திட்டத்தின் மூலம் திருகோணமலையும் யாழ்ப்பாணமும் பிரிக்கப்பட்டது. திருகோணமலை நகரச் சந்திகள் சிங்களக் குடியேற்றங்களினால் கூறுபோடப்பட்டுள்ளன. 1927 ஆம் ஆண்டு 81.8 சதவீதமாக இருந்த தமிழ் மக்கள் 1981 ஆம் ஆண்டில் 36.6 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, அன்று 1.3 சதவீதம் அதாவது வெறும் 250 சிங்களவர்களே வாழ்ந்த திருகோணமலையில் இன்று சிங்களவின சனத்தொகை 33.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. இவை திட்டமிட்டு அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

திருகோணமலையின் 204 ஆண்டுக் கச்சேரி சிவில் ஆட்சிமுறையில் ஒரு தமிழன் கூட அரச அதிபராக இற்றை வரை கடமையாற்றவில்லை.

பன்குளம், மொறவேவ என்றும் குமரன் கடவை கோமரக்கடவல என்றும் மாற்றப்பட்டன.

அரச படைகளின் மொத்தத் தொகையில் 40 சத வீதத்தினர் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ளனர். 30 சதவீதமான நிலப் பரப்பை உயா பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் படையினர் சுற்றிவளைத்துள்ளனர்.

மக்களின் பிரத்தியேக சொத்துரிமை பறிக்கப்பட்டுள்ளது. இயல்பு நிலைக்கு மீள முடியாமல் தவிர்க்கப்பட்டுள்ளது.

அரச படையினர், தமிழருடைய உரிமைகளை தாங்கள் வழங்கும் ஒரு சலுகையாகவே கருதுகிறார்கள். இந்தச் சூழலில் போராட்டத்தின் மாறுபட்ட வடிவாக, தமிழர்தம் மானுட நேயத்தின் உயர்நிலை வெளிப்பாடாக 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' திருகோணமலையில் இடம்பெறுகிறது - இவ்வாறு சட்டத்தரணி கா.சிவபாலன் தெரிவித்தார். (ஒ-9)

## நெடுந்தீவு இறங்குதுறையை புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.17

நெடுந்தீவு இறங்குதுறையைப் புனரமைப்பதற்கான திட்டம் ஒன்று யாழ்.செயலகத்தினால் உருவாக்கப்பட்டுவருகிறது.

மேற்படி இறங்குதுறையை சகல வசதிகளும் கொண்டதாக மாற்றி அமைப்பதற்கான திட்டம் வரையப்பட்டு அது 'சிரான்' செயலகத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

'சிரான்' செயலகம் இந்த இறங்குதுறையைப் புனரமைப்பதற்கான அனுமதியை வழங்கியதும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் -

இதற்கு சுமார் ஒரு கோடி ரூபா தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் -

யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-10)

## காணாமற்போனோர் குறித்த விசாரணை

யாழ்ப்பாணம்,ஏப்.17

குடாநாட்டில் கடந்த 96, 97ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள நேற்று சுன்னாகத்தில் அமைந்துள்ள உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையிலான குழுவினரே இந்த விசாரணைகளை மேற கொண்டனர்.

இந்த விசாரணை இன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளன. நேற்றுமுன்தினம் இந்த விசாரணைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

# மனிதர் உணர்ந்துகொள்ளும் குடும்பவாசனை குறித்த ஆய்வு

கோடைக்காலம் இது. 12 மணி நேரமும் புத்துணர்வோடு வைக்கும் சவர்க்காரம் இது என்று குளியல் சவர்க்காரத் தயாரிப்பாளர்கள் உத்தரவாதம் அளிப்பர். பயன்படுத்தும் சவர்க்காரத்தை வைத்துத்தான் காதலி காதலிக்கத் தொடங்குவாள் எனக் கதை அடிக்கும் விளம்பரங்கள் கூட வரும். எது எப்படியோ மனிதன் சவர்க்காரங்கள், வாசனைத் திரவியங்கள் உபயோகப்படுத்தித்தான் தன்னை மணம், குணம், தரம் நிறைந்தவனாக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

தற்போது செய்யப்பட்டுள்ள புதிய ஆராய்ச்சியில் மனிதர்கள் குடும்ப வாசனையினை உணரும் சக்தி படைத்தவர்கள் என நிரூபிக்கப்பட்டுள்ளது. என்ன பழைய சினிமாப் படத்தில் வருவதுபோலக் குடும்ப வாசனை என நீங்கள் நினைப்பது புரிகிறது.

குழந்தைகள் தங்கள் தாயின் மணத்தை அறிகின்றனவா என்று ஆய்வுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இதன் மூலம், பிறந்த குழந்தையால் கூடத் தனது தாயின் மணத்தை, அது போலவே தாய் குழந்தையின் மணத்தினை உணர முடிகிறது என ஆய்வு முடிவுகளும் கூறியுள்ளன. தற்போது ஏவன்ஸ்டேட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டிம்ஹையனி ஜூலி என்பவர் இது சார்ந்த ஆய்வில் ஈடுபட்டுள்ளார்.

இவர் தனது ஆய்வுக்காக 25 குடும்பங்களை எடுத்துக் கொண்டார். ஒவ்வொரு குடும்பத்திலும் 6 முதல் 13 வரை வயதுள்ள, இரண்டு குழந்தைகள் உள்ள குடும்பமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். ஒவ்வொரு நபருக்கும் புதிய புதிய உடைகளை அணிந்து கொள்ளக் கொடுத்தார். அத்துடன்கூட அவற்றைத் துவைக்க வாசனையில்லாத துணி துவைக்கும் சவர்க்காரமும் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆய்வுக்குரிய நபர்களையும் உடைகளை 3 இரவுகள் பயன்படுத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்பட்டது. பின், முன்னரே அளிக்கப்பட்ட வாசமில்லா சவர்க்காரத்தில் துவைத்து எவ்வித வாசனையுமில்லாத பிளாஸ்டிக் உறையில் போட்டுத் திருப்பித் தரக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அனைத்துச் சட்டைகளும் சேகரிக்கப்பட்டன. பின் ஒவ்வொருவரிடமும் இரண்டு பைகளைக் கொடுத்து முகர்ந்து அடையாளம் கண்டறியக் கேட்டுக் கொண்டார். கொடுக்கப்பட்ட இரண்டு சட்டையில் ஒன்று தமது குடும்பத்தைச் சேர்ந்ததாகவும் ஒன்று வேற்றுக் குடும்பத்தைச் சேர்ந்ததாகவும் இருந்தன.

**எஸ்.மாதவன்**

அவர்களிடம் சட்டைகளைக் கொடுத்து, எது அவர்களது குடும்பத்தினரின் சட்டை? இந்த வாசம் அவர்களுக்குப் பிடித்திருக்கிறதா என்று ஜூலி கேட்டார்.

இந்த ஆய்வில் ஈடுபட்டவர்களில் தாய், தந்தையரால் தமது குழந்தைகளின் (வாலிபப் பருவத்தினை நெருங்காதோர்) வாசத்தினைக் கண்டுகொள்ள முடிந்தது. அம்மாக்களே அதிக பட்சமாகச் சரியான விடைகளை அளித்தனர். அதே சமயத்தில் குழந்தைகளின் வாசத்தைக் கொண்டு அது தமது குழந்தைகளின் சட்டை என்று கண்டறிந்தோரால் எது எந்தக் குழந்தையினுடையது என வேறுபடுத்திட இயலவில்லை. இந்த ஆய்வின் மற்றொரு அம்சமாகக் குழந்தைகளால் (5 முதல் 8 வயதுடையோர்) அம்மாவின் வாசத்தினைக் கண்டறிய முடியவில்லை. அதேநேரத்தில் 9 முதல் 15 வயது வரையுடைய குழந்தைகளால் அம்மாவின் வாசத்தைக் கண்டறிய முடிந்தது.

எந்த வாசனை மிகவும் பிடித்துள்ளது, எனக் கேட்கப்பட்டபோது அனைவரது பதில்களும் ஒன்று போலவே இருந்தன. அதாவது தமது குடும்ப வாசனையைத் தவிர அடுத்தவரது வாசம் நன்கு பிடித்திருந்தது. அம்மாவுக்குக் குழந்தைகள் வாசம் கொஞ்சம் கூடப் பிடித்ததாக இல்லை என்று தீவிர ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டது. அதோடு அப்பாவின் வாசம் குழந்தைகளுக்குப் பிடித்தமானதாக இல்லை.

பிறந்தவுடன் பிரிந்தவர்கள் மீண்டும் இணைவதற்கு இனி குடும்ப வாசனைகூடக் கை கொடுக்கலாம். ★

## படையினர் வெளியேறினர்

தென்மராட்சி,ஏப்.17

கடந்த 1996ஆம் ஆண்டு தொடக்கம் சரசாலை தெற்கில் நிலைகொண்டிருந்த படையினர் கடந்த 12ஆம் திகதி அங்கிருந்து முற்றாக வெளியேறியுள்ளனர்.

தாம் நிலைகொண்டிருந்த வீடுகளை அவற்றின் உரிமையாளர்களிடம ஒப்படைத்துவிட்டு தமது தளபாடங்கள் உட்பட அனைத்துப் பொருள்களுடனும் அவர்கள் வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஒ-117)

# வாசகர் திருமுகம்

## காரைநகரில் தமிழ்மொழிக்கு முதலிடம் வழங்காதது ஏன்?

கடந்த 07.04.2003 அன்று காரைநகருக்கான புதிய உதவி அரச அலுவலகப் பிரிவு திறந்துவைக்கப்பட்டது. இந்து கலாசார அமைச்சர் மேற்கொண்ட முயற்சியால் விளைந்த இது, காரைநகர் பிரதேச மக்களுக்கு நன்மை பயக்கும் என்பது உண்மை.

ஆனால், அங்கே நாட்டப்பட்டிருக்கின்ற பெயர்ப் பலகையைப் பார்க்கின்றபோது அது சிங்கள மக்களுக்கான செயலகமா அல்லது தமிழ் மக்களுக்கானதா என்று சந்தேகப்படவேண்டியுள்ளது. ஏனெனில், மும்மொழிகளிலும் எழுதப்பட்டிருக்கின்ற அதில் தமிழுக்கு இரண்டாம் நிலையே வழங்கப்பட்டிருக்கின்றது.

பரம்பரை பரம்பரையாக சைவமும் தமிழும் வளர்ந்த ஒரு தமிழ்ப் பகுதியிலேயே இவ்வாறு தமிழ்மொழி மட்டந்தட்டப்பட்டிருப்பது வேதனையளிக்கின்றது; பொறுத்துக்கொள்ளமுடியாதது.

காலங்காலமாக இலங்கையை ஆண்ட சிங்கள அரசுகள் தமிழ் இன அழிப்போடு தமிழ்மொழி அழிப்பையும் செய்ததை - செய்து வருவதை - எவரும் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள். இருபத்தைந்து வருடங்களாக நடைபெற்றுவருகின்ற எமது விடுதலைப் போராட்டம் வெறுமனே இனத்துவத்தை மட்டும் மையமாகக்கொண்டதல்ல. மொழி, பண்பாடு, கலாசாரம் என்பனவே ஓர் இனத்தினுடைய அடையாளச் சின்னங்களாக விளங்குகின்றன. எனவே, தமிழ்ப் பகுதியில் தமிழ் மொழியே முதன்மைப்படுத்தப்படவேண்டும்.

இத்தகைய சிறிய சம்பவங்களை கண்டும் காணாததுபோல நாம் விட்டுவைப்போமாக இருந்தால் இறுதியில், 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையே' எமக்கு ஏற்படும்.

பொன்னாலை. **என்.பி.சங்கர்.**

## மாநகர சபை வளாகத்தின் இந்த நிலைக்கு யார் காரணம்?

கடந்த சில வாரங்களாக மாநகரசபை வளாகத்தில் இராணுவ முகாம் அமைவது பற்றி பல்வேறு மட்டங்களிலும் எதிர்ப்பு அலைகள் எழுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த நிலைமையானது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருந்திருக்கவேண்டும். 1985 ஏப்ரல் 10ஆம் திகதி மாநகரசபை அழிக்கப்பட்டபின் இன்றுவரை தொடர்ச்சியாக பதவியில் இருந்த ஆணையாளர்களோ, தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதல்வர்கள் எனப்பட்டவர்களோ, மாநகரசபையின் வளாகத்தை கையகப்படுத்தவோ, அதன் தனித்துவத்தை பேணவோ எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனை முற்றிலும் கைவிட்டு பற்றைகள் மண்டி கழிவுகள், மாமிச எச்சங்கள், மாநகரசபையினராலேயே கொட்டப்பட்டு நோய் பரவும், துர்நாற்றம் எழுப்பும் இடமாக, மாநகரசபை வளாகம் மாற்றப்பட்டது. பொன்விழா கொண்டாடுவதிலும் நூலகத்தைத் திறப்பதிலும் காட்டிய அவசரத்தை, அக்கறையை அழிந்துபோன மாநகரசபையின் இருப்பை வெளிக்காட்டும் ஓர் அடையாளத்தை நிலை நாட்டுவதிலும் காட்டியிருக்கலாம். வெளியிடங்களில் இருந்துவரும் எவருக்கும் மாநகரசபை கம்பீரமாக முன்பு அமைந்திருந்த இடத்தை அடையாளப்படுத்த எந்த முதல்வரும் முற்படாதது ஏன்? தற்போது அவ்விடத்தில் இராணுவ முகாம் அமைவது எவ்வகையிலும் பொருத்தமற்றதும், ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுமாகும். இதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுத்த பெருமை இன்றைய வரையுள்ள ஆணையாளர்களையும், நேற்று வரை முதல்வர் கதிரைகளை பெயரளவில் அலங்கரித்தவர்களையுமே சாரும்.

கண்டுக்குளி. **என்.இராஜன்.**

## யாரிடம் போய் முறையிடுவது?

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு இப்போது பெரும் பிரச்சினையாக இருப்பது எது? அது வீடு கட்ட, திருத்த மணல் இல்லாது இருப்பது என்பதே.

கடந்த காலங்களில் 1500 ரூபா வரை விற்ற ஒரு டிராக்டர் லோட் மணல் தற்போது 3000 ரூபாவுக்கும் இல்லாதிருப்பது எதனால்? யார் இதற்குப் பொறுப்பு? 'பெர்மிட்' வழங்கும் நடைமுறை மணல் பெற்றுக்கொள்வதற்கு எதற்கு? மணலைப் பெற்றுக்கொண்டு சென்று வேறு இடங்களுக்கு கடத்தல் நடைபெறுகிறதா?

யுத்தநிறுத்த ஒப்பந்த காலத்தின் பின்பு மணல் பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு கெடுபிடிகள். இதனைப் பற்றி யாரிடம் விசாரிப்பது? சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம் என்று பெயர் ஏன்? அவர்கள் சுற்றுச்சூழலை பாதுகாக்க எடுத்த நடவடிக்கைகள் என்ன?

கிராமசேவையாளரிடம் சென்று வீடு கட்டப்போகிறோம் என விண்ணப்பித்து அதன் பின் பல மாதம் காத்திருந்து படிவம் பெற்று வருடங்கள் ஓடிவிடும். மணல் வருவதற்கு. இவையெல்லாம் ஏன்? மக்கள் மீது தேவையற்ற அழுத்தங்கள், திணிப்புகள் ஏன்?

எமது பிரதேசத்து வளம் பாதுகாக்கப்படவேண்டும். இதில் இரு கருத்துக்கு இடமில்லை. நமக்கு அவசியமான உறைவிடங்களை அமைப்பதற்கு அமெரிக்காவில் இருந்து மணல் கொண்டுவரவேண்டுமா? எமது மக்களின் பாதுகாப்புக்கு, அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கும் எவரும் எமது மக்களின் வளம் அவர்களுக்குத் தடையின்றி கிடைக்க வேண்டும் என்றே சிந்திப்பார்கள்.

எனவே, இன்றுவரை மக்களின் தேவைகளுக்கு இருந்துவந்த தடைகளை நீக்க நடவடிக்கை எடுங்கள். 'பெர்மிட்' முறையை ஒழியுங்கள். சாதாரண குடிமக்களும் மணலை தேவையான போது பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுங்கள். இதனால், வீண் சிரமமும் கால விரயமும் இடைத்தரகர்களின் செல்வாக்கும் ஒழிக்கப்படும்.

மேற்படி விடயம் தொடர்பாக மக்கள் நலனில் உண்மையான அக்கறையை சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம் செலுத்தவேண்டும். மணல் பெறுவது சந்தைக்குச் சென்று கீரை வாங்குவதுபோல இருக்கவேண்டும். இதுவே இன்று குடாநாட்டு மக்களின் எதிர்பார்ப்பு.

பருத்தித்துறை. **சோ.சிவனேஸ்வரன்.**

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 465 | டிக்கட்டின் நிறம் -சிவப்பு |
|---|---|---|
| திகதி | 11.04.2003 | செல்லுபடியாகும் தொடர் இல. 5855213-5869078 |

**வெற்றி இலக்கங்கள்** 29 39 41 54




**லக்கினம்** மிதுனம்

**ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை**

**இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,675,650/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 302,242 | 10 | 3,022,420 |
| 2 இலக்கங்கள் | 27,777 | 20 | 555,540 |
| 1 இல + லக்கினம் | 27,725 | 30 | 831,750 |
| 2 இல + லக்கினம் | 2,534 | 100 | 253,400 |
| 3 இலக்கங்கள் | 737 | 500 | 368,500 |
| 3 இல + லக்கினம் | 69 | 5,000 | 345,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 361,088 | - | 5,776,610 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,776,610/-

தொடர் இல. 5869079க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஏப்பிரல் 18ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**5860008-1-08**
**5858423-5-74**
**5858623-2-16**
**5861836-7-95**
**5856592-7-84**

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


(முகமாலையில் அமைக்கப்பட்டுள்ள)

# கழிப்பறைகள் மோசமானநிலை பயணிகள் தரப்பில் விசனம்

முகமாலை சோதனை நிலையத்தில் பயணிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள கழிப்பறைகள் மோசமான நிலையில் உள்ளதாக கூறப்படுகிறது.

புத்தாண்டையொட்டி முகமாலை ஊடாக நூற்றுக்கணக்கானோர் பயணம் மேற்கொண்டனர். அப்போது கழிப்பறைகள் துப்பரவு செய்யப்படாத நிலையில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இங்கு நாளாந்த வேதன அடிப்படையில் வேலை செய்த சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கடந்த சனிக்கிழமை தொடக்கம் கடமைக்குச் செல்லாததால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சுத்திகரிப்புப் பணிக்கு நியமிக்கப்பட்ட இந்தத் தொழிலாளர்களுக்கு சோதனை நிலையத்தில் உள்ள ஏனைய வேலைகளும் பி.ப. 5.00 மணிவரை வழங்கப்படுவதை ஆட்சேபித்து இத்தொழிலாளர்கள் கடமைக்குச் செல்லாமல் பகிஷ்கரித்து வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஒ-117)

# மரண அறிவித்தல்கள்

## வைரமுத்து பொன்னுத்துரை

மட்டுவில் மத்தி, மடத்தடி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து பொன்னுத்துரை 16-04-2003 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பொ. தேவபாதம் (மகன் - யாழ். கல்வியலயம்)
அ.கனகசபை (மருமகன் - ஆசிரியர்)

(c/27452)

## திருமதி அன்னம்மா துரைராஜா

தாவடியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா துரைராஜா அவர்கள் நேற்று (2003.04.16) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் துரைராஜா அவர்களின் மனைவியும் அமரர் திரு.திருமதி கந்தையா - தங்கம் ஆகியோரின் புதல்வியும், அமரர் கனகசபை, அருமைத்துரை ஆகியோரின் சகோதரியும் சிவராஜா (ஞானேஸ்வரன் அரிசி ஆலை, இணுவில்), சின்னராசா(லிங்கம் ஸ்ரோர்ஸ், இணுவில்), சிவகுமாரன் (கணேசன்சென்ரர், தாவடி), அருட்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகநாயகி, கமலாம்பிகை, செல்வமலர், ஸ்ரீ ஆகியோரின் மாமியாரும் ஞானலோபனி, கோகுலன், இராகுலன், கோசர்மிலன், பிரதீபன், சிவரூபன், நிதேஷன், சிந்துஜா, சிவகாசிக... யோரின் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2003.04.17) வியாழ... அவரின் இல்லத்தில் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் 12 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(16871)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.




# தெணியான் மணிவிழா உடன் மலர் வெளியீடு

தலைவர்: பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி)
காலம்: 18.04.2003 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி
இடம்: யா/தேவரையாளி இந்துக்கல்லூரி கலையரங்கு

## நிகழ்வுகள்

மங்கள விளக்கேற்றல்
திரு. க.கனகரத்தினம் (பிரதேச செயலர், கரவெட்டி)
திரு. வே.தி.செல்வரத்தினம் (கல்விப்பணிப்பாளர், வடமராட்சி)
திரு. இ.விக்கினேஸ்வரமூர்த்தி (நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை)
திரு. ரமணி (முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர், வடமராட்சி)
திரு. ம.குட்டித்தம்பி (அதிபர், யா/தேவரையாளி இந்துக்கல்லூரி, கரவெட்டி)
இறை வணக்கம்
வரவேற்புரை: திரு. மு.வன்னியசிங்கம் (ஆசிரியர்)
தலைமை உரை:
வாழ்த்துரை: கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்)
கவிஞர் இ.முருகையன் (முன்னாள் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்)
மலர்வெளியீடு: கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான், முன்னாள் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்)
பாராட்டுரை: திரு. ந.கலாமணி (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
பேராசிரியர் சபா.ஜெயராசா (தலைவர், நுண்கலைப்பீடம்)
கவிஞர் சோ.பத்மநாதன் (முன்னாள் அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)
பேராசிரியர் நா.ஞானகுமாரன் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி எஸ்.சிவலிங்கராசா (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
திரு. சி.வன்னியகுலம் (M.A. ஆலோசகர், நியாப்திட்டம்)
ஏற்புரை: விழா நாயகன்
நன்றியுரை திரு. கொற்றை கிருஷ்ணானந்தன் (தொகுப்பாசிரியர், மணிவிழா மலர்)

## தெணியான் மணிவிழா உடன் மலர் அறிமுகம்

தலைவர்: டாக்டர் திரு.க.வேலும்மயிலும் J.P.
காலம்: 19.04.2003 சனிக்கிழமை பி.ப. 3.00 மணி
இடம்: பூமகள் சனசமூக நிலையம். கொற்றாவத்தை.

## நிகழ்வுகள்

மங்கள விளக்கேற்றல்
திரு. யோன் சின்னராசா (காப்பாளர், ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயம்)
திரு. பி.சிவபாதம் (தலைவர், கொற்றாவத்தை கி. அ. சங்கம்)
திரு. மு.நடேசன் (முன்னாள் தலைவர், கலைவாணி சனசமூக நிலையம்)
திரு. நு.தங்கவேலாயுதம் (முன்னாள் தலைவர், பூமகள் சனசமூக நிலையம்)
திரு. மா.கனகசிங்கம் (தலைவர், ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயம்)
திரு. ச.இராசேந்திரம் (பொருளாளர், கேட்டிவளை சித்திவிநாயகர் ஆலயம்)
திரு. சி.மகாலிங்கம் J.P. (தலைவர், பாரதி க.க. நி)
திரு. மா.விஜயரத்தினம் J.P. (முன்னாள், தலைவர் பாரதி விளையாட்டுக்கழகம்),
திரு. க.வேலாயுதம் (போசகர் பூமகள் ச.ச.நி)
திரு. சி.ரவிச்சந்திரன் (தலைவர், பூமகள் ச.ச.நி)
இறைவணக்கம்
வரவேற்புரை:
திரு. அ.அருளானந்தசோதி (தபால் அதிபர்)
தலைமையுரை:
வாழ்த்துரை:
திரு. சோ.சிவனருள்சுந்தரம் (காண்டீபன், சட்டத்தரணி)
திரு. த.சிதம்பரப்பிள்ளை (தலைவர், கட்டுநெல் ப.நோ.கூ.ச)
திரு. ஆ.கந்தையா (முன்னாள் ஆசிரியர்)
கலாபூஷணம் திரு. வே.க.பாலசிங்கம் (ஆசிரியர்)
திரு. க.தங்கவடிவேல் (ஆசிரியர்)
திரு. வே.மகேஸ்வரன் (முன்னாள் அதிபர்)
பாராட்டுரை:
திரு. மெய்யரசன்
திரு. சி.க.இராஜேந்திரன் (முன்னாள் எழுத்தர்)
திரு. க.சின்னராஜன் (பிரதிமுகாமையாளர், மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
திரு. க.லோகநாதன் (ஆசிரியர்)
திரு. செ.சதானந்தன் (முன்னாள் அதிபர்)
திரு. கோ.குணசிங்கம் (முதன்மை ஆசிரியர்)
திரு. வெ.சுப்பிரமணியம் (சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)
திரு. சே.பரராசசிங்கம் (முதன்மை ஆசிரியர்)
திரு. ந.நகுலேந்திரன் (ஆசிரியர்)
நூல்களை வெளியிடுவதற்கான காசோலையைக் கையளித்தல்:
திரு. ஆ.கிருஷ்ணபிள்ளை (முன்னாள் ஆசிரியர்)
ஏற்புரை:
விழாநாயகன்
நன்றியுரை:
திரு. மா.பாஸ்கரன் (ஆசிரியர்)

குறிப்பு: விழாவின் ஆரம்பமாக விழா நாயகனும் பாரியாரும் கொற்றாவத்தை சித்திவிநாயகர் ஆலய முன்றிலில் இருந்து ஊர்வலமாக அழைத்துவரப்படும் நிகழ்வில் அனைவரும் தவறாது வந்து கலந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணிவிழா மலரின் விலை ரூபா 150/-
மண்டபத்தில் அறிமுக விலை ரூபா 100/-

(16868)

தெணியான் மணிவிழாக்குழு,
கொற்றாவத்தை.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2003 மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை அரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள ப. நோ. கூ. சங்கங்களிடமிருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கத்துக்கும் வழங்கீடுசெய்யப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2003, மார்ச் (MT) | 2003, ஏப்ரல் (MT) | 2003, மே (MT) |
| 01 | யாழ்ப்பாணம் | 250 | 250 | 250 |
| 02 | நல்லூர் | 110 | 110 | 110 |
| 03 | அச்சுவேலி | 115 | 115 | 115 |
| 04 | நீர்வேலி | 120 | 120 | 120 |
| 05 | மானிப்பாய் | 100 | 100 | 100 |
| 06 | பண்டத்தரிப்பு | 70 | 70 | 70 |
| 07 | தெல்லிப்பழை | 47 | 47 | 47 |
| 08 | அளவெட்டி மல்லாகம் | 115 | 115 | 115 |
| 09 | சங்கானை | 150 | 150 | 150 |
| 10 | உடுப்பிட்டி | 30 | 30 | 30 |
| 11 | கட்டைவேலி நெல்லியடி | 40 | 40 | 40 |
| 12 | பருத்தித்துறை | 90 | 90 | 90 |
| 13 | புலோலி | 25 | 25 | 25 |
| 14 | மருதங்கேணி | 60 | 60 | 60 |
| 15 | சுன்னாகம் | 155 | 155 | 155 |
| 16 | சாவகச்சேரி | 115 | 115 | 115 |
| 17 | கைதடி | 60 | 60 | 60 |
| 18 | கொடிகாமம் | 105 | 105 | 105 |
| 19 | வேலணை | 20 | 20 | 20 |
| 20 | புங்குடுதீவு நயினாதீவு | 40 | 40 | 40 |
| 21 | ஊர்காவற்றுறை | 55 | 55 | 55 |
| 22 | காரைநகர் | 40 | 40 | 40 |
| 23 | தீவகம் | 08 | 08 | 08 |
| 24 | நெடுந்தீவு | 20 | 20 | 20 |
| | மொத்தம் | 1940 | 1940 | 1940 |

02. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப. நோ. கூ. சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா500/= இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு செயலகத்தில் செலுத்தி, கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2003. 04. 21 ஆம் திகதி தொடக்கம் 2003. 04. 29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் மு. ப. 10. 00 மணி தொடக்கம் பி. ப. 3. 00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபருடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03. மீளளிக்கமுடியாத கேள்விவைப்பாக ரூபா500/=ஐ அந்தந்த மாவட்டச் செயலகங்களில் செலுத்தி, அரசாங்க அதிபர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்வி கோரப்படவுள்ள அரிசி புழுங்கல் (சிவப்பு நாடு) அரிசியாக இருத்தல்வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

05. கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு கேள்விப்பத்திரத்தைப் பெற்றவர்கள் கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வமிருப்பின் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (கேள்வி முறி - **Bid Bond**) மெ. தொன் ஒன்றுக்கு ரூபா 600/= படி செலுத்துதல் வேண்டும். (விவரம் கேள்வி ஆவணத்தில் உள்ளது.)

06. பூரணப்படுத்திய இரு கேள்விப்பத்திரங்களை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத்தபாலுறையில் நேரடியாகவோ/தபால்மூலமாகவோ யாழ். செயலக மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 30. 04. 2003 பி. ப. 2. 00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றையதினம் பி. ப. 3. 30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது எழுத்துமூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

07. கேள்விப்பத்திரத்தின் தபாலுறையில் இடதுபக்க மேல்மூலையில் "அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படவேண்டும்.

08. கேள்வி கோருபவர்கள் குறிப்பிடப்பட்ட ப. நோ. கூ. சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி கோரியவர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - **Performance Bond**) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்திற்கான விலை, மாவட்டவிலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோகவிலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

**செ.பத்மநாதன்**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச்சபை/ மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

14.04.2003.　(C/27435)

## மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

**நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி**

**காலம்**: 27.04.2003 ஞாயிற்றுக்கிழமை
**இடம்** :நீர்வேலி சவாரித்திடல்
**நேரம்**: பிற்பகல் 2.00மணி (பு.நே.)

*குறிப்பு*: வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து காளைகள் பங்கு பற்றுகின்றன என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

(16860)　　- ஐ.வி. கழகத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பலாலி ஆசிரிய கலாசாலை முதலாம் வருட ஆசிரிய மாணவன் **குமாரதாசனின்** அன்புத் தந்தையார்

### அமரர் செ.தங்கராசா

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலாசாலை சமூகம்
(C/27453)　　பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியை
**செல்வி க.வானதி**
(மாணவி, பாலாலி ஆசிரியர் கலாசாலை)
அவர்களின் பாசமிகு தந்தையார்

### கந்தையா கனகசபாபதி

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.*　(27451)　- **ஆசிரியர் கழகம்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லத்துரை வாலாம்பிகை

களபூமியைப் பிறப்பிடமாகவும் புதுரோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை வாலாம்பிகை நேற்று (16.04.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற K.K.கந்தையாபிள்ளை - சுந்தரம் தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற இராசையா (மலாயன் பென்சனியர்) - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் செல்லத்துரையின் (ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி, காரைநகர்) அருமை மனைவியும் இரத்தினராஜா, பத்மராணி (இந்தியா), வரலட்சுமி (லண்டன்), இராஜலட்சுமி, விக்னேஸ்வரன் (M.P.C.S. அச்சகம், யாழ்ப்பாணம்), நாகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் இராசபூபதி, நடராஜா (இந்தியா, S.V.M. கொழும்பு), பாலசுந்தரம் (லண்டன்), அருந்தவச்செல்வி, கணேசமூர்த்தி ஆகியோரின் அருமை மாமியும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், பத்மநாதன், பேரின்பநாயகம், தனலட்சுமி மற்றும் இராசம்மா (கொழும்பு), சிவபாலன் (உரிமையாளர் க.கு.கந்தையாபிள்ளை அன் சன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப பாணம்), சற்குணதேவி (கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2003) வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்ப லோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராசையா செல்லத்துரை
*மருதடி, காரைநகர்.*　(16872)　(கணவர் - ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி. காரைநகர்)

### R.பத்மராஜா

*(இளைப்பாறிய காட்டு இலாகா அதிகாரி, கல்முனை)*

R.பத்மராஜா 14.4.2003 கனடாவில் அமரத்துவம் அடைந்துவிட்டார். அன்னார் சிவலோகமணியின் அன்புக் கணவரும் ஹரியின் பாசமிகு தந்தையும் புஸ்பராஜா, யோகராஜா, புஸ்பராணி, பத்மராணி, மகாராஜா, நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கணேசன், வெஸ்லிகுலம், சந்திரமணி நடராஜா ஆகியோரின் மைத்துனரும் வினிதாவின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.04.2003 சனிக்கிழமை ரொறன்ரோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
R.யோகராஜா
(C/27449)　(முகாமைத்துவ பணிப்பாளர - General Inks Ltd.)

### கந்தையா கனகசபாபதி

*(ஓய்வுபெற்ற நில அளவையாளர் - ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவர்)*

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி காலமானார்.

அன்னார் ஞானலக்ஷ்மியின் அன்புக் கணவரும் உதயகுமாரன் (ஹொலண்ட்), வானதி(ஆங்கில விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறிதமயந்தியின் (ஹொலண்ட்) மாமனாரும் சாயிசிறி, தாட்சாயி (ஹொலண்ட்) ஆகியோரின் பேரனும் குமாரசாமி, சிவபாக்கியம், திருநாவுக்கரசு, சந்திரசேகரம், விசாலாட்சி, திலவதி ஆகியோரின் சகோதரரும் சரஸ்வதி, நிகஸ்வரி, உமாமகேஸ்வரி, ஞானேஸ்வரன், புவனேஸ்வரன், ஜெயாராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2003) வியாழக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் பி.ப. 4 மணிக்கு பொக்கணை இந்து மயானத்தில தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு கிழக்கு, ஊரெழு.*　(16864)　*தகவல்:* மனைவி, பிள்ளைகள்.